
உயிரில்
கலந்த கீதம்
உமா பாலகுமார்

## உள்ளே...


உயிரில் கலந்த கீதம்! 5

சகியென்று சரணடைந்தேன் 93


★

# உயிரில் கலந்த கீதம்!

## 1

*வாசலில் பாதம் பதித்து அவன்*
*வண்ணத்துப்பூச்சியாய் சென்ற பிறகும்...*
*அவன் கொலுசின் சங்கீதம்...*
*அவன் செவிமடல்களை...*
*இனிய கீர்த்தனையாய்*
*வருடிச் செல்வதாய்...!*

ஆதவனின் கண்கள் பூமிக் காதலியை பிரியப் போவதை எண்ணி சோகமாகச் சிவந்து போயிருந்த பொன்மாலைப் பொழுது! கோடை மழையில் குளித்து, புத்துணர்வுடன் இருந்த மரங்கள் தென்றலில் தலைதுவட்டிக் கொண்டிருந்தன.

மலர்களின் முகவரியைத் தேடி வண்ணத்துப் பூச்சி ஒன்று அலைபாய்ந்தபடி அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தது. சிறகு விரித்த பறவை இனங்களுடன் கதிர்கள் விரிந்த வயல்களும் சாலையின் இருபுறமும் பரவித்தெரிய, அதற்கு மதில் சுவராய், தூரத்தில் தென்னை மரங்களின் அணிவகுப்பு!

சுத்தமான காற்றும், அமைதியான அந்தி மாலையும், சுற்றிலும் தெரிந்த பச்சைப் பட்டு விரிப்பும் ஸ்ருதிலயாவின்

மனதிலும் இனிமையை படரச் செய்வதாய்! ஜன்னலோரத்தில் அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த ஸ்ருதியாவுடன், அவளுடைய அப்பா வாசுதேவனும் தாய் ரமணியும் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அவர்களுடைய கார் தஞ்சாவூரை அடுத்திருந்த கிராமத்திற்குள் சென்று கொண்டிருந்தது. ரமணியுடைய சொந்த ஊர் அது! நாளை மறுநாள் அவருடைய அண்ணன் மகன் விஜய்க்குத் திருமணம்.

இன்னும் சிறிது நேரத்தில் தன் குடும்பத்தினரைப் பார்க்கப் போகும் பரவசம் ரமணியின் முகத்தில் அதிகமாய்! வாசுதேவனுக்கு உறவென்று யாருமில்லை என்றாலும், அவர் படிப்பையும் உத்தியோகத்தையும் பார்த்தே ரமணியைத் திருமணம் செய்து வைத்தார் அவளுடைய தந்தை. ஸ்ருதி அவர்களுக்கு ஒரே மகள். இந்த வருடம்தான் பி.எஸ்சி. முடித்திருக்கிறாள்.

வாசுதேவன் கோயம்புத்தூரில் அதிகாரியாக இருக்கிறார். ஸ்ருதிக்கு எப்போதுமே பாட்டி வீட்டுக்குச் செல்வதென்றால் கொள்ளைப் பிரியம்! கார் அந்த ஊரிலிருந்த பெரிய வீட்டின் முன் சென்று நின்றபோது, அங்கு கூடியிருந்த உறவினர்களும் ஊர்ப் பெரிய மனிதர்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

வாசலில் பெரிய பந்தல் போடப்பட்டு, வீட்டுக்கு கல்யாணக் களை வந்திருந்தது. ஸ்ருதியின் மாமாவும் மாமியும் அவர்களை உள்ளே அழைத்துச் செல்ல, பாட்டி பர்வதம் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு உள்ளே கூட்டிச் சென்றார். நடுவில் பெரிய முற்றத்துடன் சுற்றிலும் தூண்கள் சூழ்ந்த தாழ்வாரங்களுடன் அந்த வீட்டின் விஸ்தீரணமான அமைப்பும், கம்பீரமான அழகும் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.



''அம்மாச்சி... விஜயை எங்கே காணோம்? நான் வரேன்னு தெரிஞ்சும் வீட்டில இல்ல பாத்தீங்களா?'' சலுகையுடன் கேட்டபடி, பாட்டியின் தோளில் உரிமையுடன் சாய்ந்து கொண்டாள்.

''அவனோட நண்பர்களுக்கெல்லாம் பத்திரிகை வைக்கப் போயிருக்கான்டா... இப்ப வந்துடுவான்..'' என்றார் வாஞ்சையுடன். விஜய் வந்தவுடன் அவனைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே பொழுது ஓடியது. அவனுடைய அக்கா ஸ்வர்ணாவும் குடும்பத்துடன் வந்துவிட - அன்றிரவு அவர்கள் உறங்குவதற்கு ஒரு மணியானது.

கையில் பாட்டி வைத்துவிட்ட மருதாணியைக் காய வைத்தபடியே ஸ்வர்ணாவும், ஸ்ருதியும் பேசிக் கொண்டிருந்தனர். பழைய கதைகளும், சிறு வயது நினைவுகளுமாய் கல்யாணப் பேச்சும் இணைந்து கொள்ள, ரம்யமாகஇருந்தது. அது ஒரு பாசமான வீடு.. நேசப் பறவைகளின் வீடு!

ஸ்ருதி, விஜய்யிடம், ''ஏய்... ஜனனி கிட்டே ஃபோனிலாவது பேசினியா? இல்லை.. வெட்கப்பட்டுட்டுப் பேசாம இருந்திட்டியா? உன்னை நம்ப முடியாது! நேரா போய் பாத்துட்டு வந்தாலும் வந்திருப்பே..!'' - குறும்புடன் வந்தது அவள் குரல்.

''ஆமாம்... நேராவே போய்ட்டு வந்துட்டேன். 'எனக்கு ஒரு வாயாடி அத்தை பொண்ணு இருக்கா... ஸ்ருதின்னு! அவகிட்

மட்டும் கொஞ்சம் கேர்ஃபுல்லா இரு'ன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்..''

''நான் வாயாடியா? இரு.. இரு.. உன்னோட ஒய்ஃப் வரட்டும், பாப்போம்... அவ எப்படி இருக்கான்னு! ஆனா அவ பாவம்...! உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு என்ன பாடுபடப் போறாளோ..'' பரிதாபத்துடன் கூறினாள்.

அதற்குள் வர்ணாவும், ''நீ சொல்றது கூட சரிதான்! இந்த முசுடு கிட்ட மாட்டிக்கிட்டு, அவ என்ன அவஸ்தைப்படப் போறாளோன்னு நினைச்சா கஷ்டமாதான் இருக்கு!'' என்றாள் கேலியாக.

''நீங்க ரெண்டு பேரும் போதும்... என் பேரைக் கெடுக்கறதுக்கு! அக்கா.. அங்க அத்தான் அழற சத்தம் கேக்குது பாரு.. என்னன்னு போய்க் கேளு! உன்னைக் கல்யாணம் செஞ்ச பயத்திலே இருந்து இன்னும் அவர் தெளியவே இல்லையே பாவம்!''

''போடா... அங்க அழறது என் பையன்!'' என்றபடி அவன் தலையை செல்லமாகக் கலைத்துவிட்டு எழுந்து சென்றாள் ஸ்வர்ணா. அவளிடம் திரும்பிய விஜய், ''ஸ்ருதி! உன் படிப்புதான் முடிஞ்சிடுச்சே... நீ எப்போ கல்யாணச் சாப்பாடு போடப் போறே?'' குறும்புச் சிரிப்புடன் கேட்டான்.

''அதெல்லாம் இப்ப ஒண்ணும் கிடையாது. நான் கொஞ்ச நாள் வேலை பாக்கணும்... சுதந்திரமா இருக்கணும்! ஒரு ரெண்டு வருஷமாவது லைஃபை என்ஜாய் பண்ணிட்டு, அப்புறம்தான் கல்யாணமெல்லாம்! உன்னாட்டம் மாப்பிள்ளையைக் காமிச்சவுடனே மாட்டிப்பேன்னு நினைச்சியா?'' உதட்டை சுழித்தபடி கூறினாள்.



''மாமா ரொம்ப ஸ்ட்ரிக்டாச்சே... உன் ஆசைக்கெல்லாம் ஒத்துப்பாரா? உடனே மாப்பிள்ளை பாத்துட்டா என்ன பண்ணுவே?''

''ப்ச்... நீ வேற பயமுறுத்தாதே விஜய்! அம்மா கிட்டே சொல்லித்தான் மெதுவா அப்பாவோட பேசணும்..'' மெலிதான பயம் தெரிந்தது குரலில்! வாசு, தான் நினைத்ததை சாதிக்கும் ரகம்... ரமணி பொறுமையானவர் என்பதால் பொதுவாகப் பிரச்சினைகள் வருவதில்லை.

''சரி பசங்களா.. பேசினது போதும், வந்து படுங்க'' என்று பாட்டி அழைத்தபோது எழுந்தவள், ''உன்னோட கனவுல ஜனனி வந்து உன்னைத் தூங்க விடாமப் பண்ணட்டும்... ஸ்வீட் ட்ரீம்ஸ்!'' விஜயைக் கிண்டல் செய்து விட்டுப் படுத்தவளுக்கு, எப்போதுமே தனியறையில் மெத்தையில் தூங்குவதை விட, பாய் விரித்து வரிசையாக அன்பினால் கோர்க்கப்பட்ட அன்றில்களாய் உறங்கியது மனதிற்கு இதமாய்!

**ம**றுநாள் காலையில் எழுந்தவுடனே, ஊரைச் சுற்றிப் பார்க்கச் சென்றபோது சப்த சாகித்யம் செய்து ஊரையே எழுப்பிக் கொண்டிருந்த சேவலும், போர்வெட்டிலிருந்து வழிய ஆரம்பித்திருந்த தண்ணீரும், சாணம் தெளித்து கோலமிடப்பட்டிருந்த வாசல்களும் விடியலுக்கு கட்டியம் கூறின.

வீட்டிற்கு வந்தபோது அமெரிக்காவிலிருந்து ரமணியுடைய தங்கை விமலா சென்னைக்கு வந்து விட்டதாகவும், இன்று அதிகாலையில் காரில் கிளம்பி இங்கு வருவதாகவும் பாட்டி கூறியபோது மகிழ்ச்சியில் மனம் றெக்கைக் கட்டிப் பறந்தது.

''ஸ்ருதி! நான் உனக்கு தைச்சு வைச்சிருக்கற பட்டுப் பாவாடை, தாவணியைப் பார்த்தியாடா.. பிடிச்சிருக்கான்னு வந்து பாரு'' என்றபடி அவர் அழைத்துச் செல்ல, எல்லாமே அவளுக்குப் பொருத்தமாக இருந்தது. அவருக்குப் பிடித்த மாதிரி உடையணிந்து பேத்தி ஒரு இளவரசியைப் போல் இருக்க வேண்டும் என்று எப்போதுமே ஆசைப்படுவார் அவர்.

அழகிய பட்டுப் பாவாடை தாவணியணிந்து, தளரப் பின்னிய நீண்ட கூந்தலில் முல்லைச் சரங்கள் புன்னகைக்க, காதில் சிறு ஜிமிக்கிகள் அசைந்தாட, ஒரு ஓவியம் போலிருந்தாள் ஸ்ருதி. நேற்று கைகளில் வைத்த மருதாணி அழகாகச் சிவந்திருந்தது.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டதுமே, மகிழ்ச்சித் துள்ளலுடன் சித்தியை வரவேற்க ஓடியவள், காரின் பின்புறக் கண்ணாடி இறக்கப்படும் போதே, ''சித்தி..!'' என்று உற்சாகமாகக் குனிந்தபோது அங்கு தெரிந்த புதிய முகத்தைக் கண்டதும் ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

அவள் முகம் உடனே அனிச்ச மலராய்! காரில் அமர்ந்திருந்த புதியவனும் இரு புருவங்களும் நெளிய ஒருவித சுவாரசியத்துடன் அவளை ஏறிட்டான். ஸ்ருதியின் முகம் உடனே குழம்பிச் சிவந்தது. முகம் மறைத்த முகில்களை விலக்கி வெண்ணிலவு வெளியே வந்தது போல்!

நல்ல எலுமிச்சை நிறத்தில், கொடி போன்ற உடலுடன் றுதுறுவென்ற அழகு முகத்துடன் ஓவியப் பாவை பாலிருந்த அவளைக் கண்டபோது அவனுடைய மனதில் பரும் மாற்றம் நிகழ்வதாய்!



ஸ்ருதி ஒருவித குற்ற உணர்ச்சியுடன் உதட்டைக் கடித்தபடி தன் தவறை உணர்ந்தவள், ''ஸாரி...'' என்றபடி பின்னடைந்த போது அவன் விழிகள் அவளுடைய சிவந்த இதழ்களின் மேல் பதிந்தது.

மெதுவாக அவள் தன் பாதம் பதித்து பின்னோக்கி நடந்தபோது அவளுடைய கொலுசின் வருடலான த்வனி, ஏனோ அவனுக்குள் ஜதியாய்... இசையாய்! அப்போது அவளுக்குப் பின்னால் வேகமாக வந்த விஜய், அவளைப் பிடித்து நிறுத்தினான்.

''ஏய்... ஸ்ருதி! இங்கே என்ன பண்றே? என் ஃப்ரெண்டை வரவேற்கவா இவ்வளவு வேகமா ஓடி வந்தே?'' கிண்டலாகக் கேட்டான்.

ஸ்ருதி பற்களைக் கடித்தபடி, ''விஜய்..! நீ வேற என் மானத்தை வாங்காதே... நானே சித்தின்னு நினைச்சி யாரையோ கூப்பிட்டுட்டு என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டிருக்கேன்..'' என்று சீறினாள்.

''ஒண்ணும் முழிக்க வேணாம்... வா! நானே அவனை உனக்கு இன்ட்ரட்யூஸ் பண்றேன்..'' என்று கூறும்போதே காரிலிருந்து இறங்கியவனின் அசாத்திய உயரம் அவள் கவனத்தைக் கவர்வதாய்! ஸ்ருதி நல்ல உயரம்... ஆனால் அவளே நிமிர்ந்து பார்க்கும் அளவு உயரமாக இருந்தான் அவன்.

''வாடா ப்ரகதீஷ்... எப்படி இருக்கே? நீ ஈவினிங்தான் வருவேன்னு நினைச்சேன். அப்புறம்.. நான் உன்கிட்டே

சொல்வேனே.. என் அத்தை பொண்ணு ஸ்ருதின்னு. அவ இவதான்!'' என்று அறிமுகப்படுத்தினான் விஜய்.

அவளிடம் திரும்பி, ''இவன் என்னோட ஃப்ரெண்ட் ப்ரகதீஷ்! அண்ணாமலை யுனிவர்சிடியில என்னோட படிச்சவன். நானும் இவனும்தான் அங்கே வீடு எடுத்து ஒண்ணாத் தங்கி இருந்தோம். இப்ப சென்னையில கம்ப்யூட்டர் நிறுவனம் ஒண்ணை நடத்திட்டு இருக்கான்..'' என்றான்.

மாநிறமாய், கம்பீரமான முகத்தில் கருத்து அடர்ந்திருந்த மீசையுடன், ஊடுருவும் கூர்மையான விழிகள் மாயம் செய்ய, வசீகரமாக இருந்தவனை அவள் அளவிடும்போதே, ''ஹலோ!'' என்று கண்ணோரம் சுருங்க, அவன் கிண்டலாகச் சிரித்தபோது இதயம் ஒரு கணம் தன் துடிப்பை நிறுத்தியது. ஏனோ காரணம் புரியாமல் மனம் விதிர்த்தது.

''ஹாய்..'' என்று அவளுக்கே கேட்காத குரலில் முணுமுணுத்துவிட்டு தர்மசங்கடத்துடன் திரும்பியவள், வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

***வாசலில் பாதம் பதித்து அவள் சென்ற பிறகும்...***
***அவள் கொலுசின் சங்கீதம் இனிய கீர்த்தனையாய்...***
***அவன் செவி மடல்களை வருடிச் செல்வதாய்!***

தன் மனதை முதன் முதலில் சலனப்படுத்தியவளையே நம்ப முடியாத ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் ப்ரகதீஷ். டிரைவர் அவனுடைய பெட்டிகளை எடுத்துவர, விஜய் அவன் கையைப் பிடித்து மகிழ்ச்சியுடன் உள்ளே அழைத்துச் சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினான். பாட்டியின் தோளில் முகம் பதித்தபடி அவனையே



பார்த்திருந்தவளுக்கு அவன் மாடிக்குச் சென்ற பிறகும் ப்ரகதீஷின் நினைவுகள் விடாமல் துரத்துவதாய்!

அவன் பார்வையில் தெரிந்த சிறு கிண்டலும், கூர்மையும் அவளை ஏதோ செய்தது. முதன் முதலாய் காதலின் குறுஞ்சிரிப்பு மனதில் அவன் நினைவுகளோடு நுழைந்தது... கவிதையாய்ப் படர்ந்தது.

சிறிது நேரம் கழித்து சித்தி விமலாவும் வந்துவிட, பொழுது இனிமையாகச் சென்றது. எந்த விஷயத்தையுமே மனம் திறந்து சித்தியிடம் பகிர்ந்து கொள்ளும் மனது, மேகத்தை இழுத்து முக்காடு போட்டுக் கொண்டு மறைகிற வெண்ணிலவாய் மறைந்து கொண்டது. உறவினர் வருகையால் வீடே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

சாப்பிட்ட பிறகு விஜய்க்கு வேண்டிய துணிகளையும், மண்டபத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியவற்றையும் ஸ்வர்ணாவும் அவளும் அடுக்கி வைத்தனர். தஞ்சாவூரில் பெரிய மண்டபத்தில் திருமணம் என்பதால் மாலை ஐந்து மணிக்கு மாப்பிள்ளை அழைக்க பெண் வீட்டிலிருந்து வருவதாகக் கூறி இருந்தனர்.

பட்டில் சுடிதார் அணிந்து, பொருத்தமான நகைகளுடன் 'ஃப்ரெஞ்ச் நாட்' முறையில் தலை அலங்காரம் செய்து, பின்புறம் கூந்தலைத் தோகையாக விரித்து விட்டு நான்கு மணிக்கே அழகாகத் தயாராகி இருந்தாள் ஸ்ருதி.

அம்மாச்சி அவளிடம், ''ஸ்ருதிம்மா... விஜய் எங்கேன்னு கொஞ்சம் பாத்துட்டு வாடா.. பின்னாடி ஆத்தங்கரைக்கு அந்தப் பையனோட போனதா மாமா சொல்றான். அஞ்சு மணிக்குப் பொண்ணு வீட்டில இருந்து அழைக்க

வந்திடுவாங்க. இப்ப கிளம்பினாதான் சரியாயிருக்கும். மணி நாலு.. போய் அழைச்சிட்டு வாடா!'' என்றார்.

''சரி அம்மாச்சி! எல்லாம் ரெடியா இருக்கு... அவன் வந்து கிளம்பணும்... அவ்வளவுதான்! நான் போய் அழைச்சிட்டு வரேன். நீங்க வேலை ஏதாவது இருந்தாப் பாருங்க..!'' மென்மையாக முறுவலித்தபடி கூறிவிட்டுச் செல்லும் பேத்தியையே அவர் விழிகள் பாசத்துடன் தொடர்ந்தன.

விஜயுடன் ப்ரகதீஷும் இருப்பானே என்ற மனதில் ஒருவித படபடப்புடன் ஆற்றங்கரைக்குச் சென்றாள் ஸ்ருதி. தான் நடக்கப் போவது காதல் பாதையில் என்பதும், கடக்கப் போவது அவன் இதயத்தை என்பதையும் அவள் அப்போது அறியவில்லை.

## 2

*நதிக்கரையில்*
*நான் அமர்ந்திருக்கையில்...*
*உன் கொலுசின்*
*உச்சரிப்புகள்...*
*சாஹித்யத்துடன் சிணுங்கும்*
*சப்த சந்தமாய்...*

**வி**ஜயும், ப்ரகதீஷும் ஆற்றங்கரை மணலில் அமர்ந்து உற்சாகமாகப் பேசிக் கொண்டு இருந்தனர். களித்துக் கடந்த கல்லூரி நாட்கள், கனவுப் பெட்டகமாய், நினைவுத் திறவுகோலால் திறக்கப்பட்டிருந்தது. காவிரி ஆறு அமைதியான சிற்றோடை போல் ஆர்ப்பாட்டமின்றி ஓடிக் கொண்டிருந்தது.



அந்த நேரத்திலும் காற்று சில்லென்று நதியின் குளிர்ச்சியைத் தனக்குள் சுமந்து வீசிக் கொண்டிருந்தது. திடீரென்று, ப்ரகதீஷின் காதுகளில் அந்த மென்மையான பாதக் கொலுசொலி கேட்டது. அந்த சப்தம் அவன் இதயத்தைத் தட்டி எழுப்ப, ஆவலுடன் திரும்பியபோது அங்கு ஸ்ருதி வந்து கொண்டிருந்தாள்.

''விஜய்! இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே...? மாப்பிள்ளையை அழைச்சிட்டு வாங்கன்னு அங்கே ஜனனி ஒரே ரகளை பண்றாளாம். இப்பதான் ஃபோன் வந்தது. உன்னைக் காதைத் திருகி அழைச்சிட்டு வரச் சொன்னாளாம்! அதனால அம்மாச்சி உன்னை உடனே அழைச்சிட்டு வரச் சொன்னாங்க... பொண்ணு வீட்டில இருந்து அஞ்சு மணிக்கு வந்துடுவாங்களாம்...'' குறும்பு கொப்பளிக்கும் குரலில் கூறினாள்.

ப்ரகதீஷின் விழிகள் சீண்டலாக அவளை அளவிட்டது. புன்னகையுடன் மணலைத் தட்டிவிட்டு விஜய் எழுந்தபோது, அவள் விழிகள் ப்ரகதீஷிடம் பதிந்து அதன் கூர்மையைத் தாங்க முடியாமல் தயங்கித் தடுமாறி பிறகு மண்ணில் பதிந்தது. அதில் தெரிந்த உணர்வுகளின் மொழி புரியா விட்டாலும் ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு தன்னுள் பரவுவது மட்டும் புரிந்தது.

அவள் வேகமாகத் திரும்பி வீட்டிற்குச் செல்லும் வழியில் நடந்தபோது எதுவோ ஒன்று தன்னைவிட்டு நீங்கிச் செல்வது போலிருந்தது ப்ரகதீஷுக்கு! அன்றிரவு மாப்பிள்ளை அழைப்பு முடிந்து, நிச்சயதார்த்தமும், விமரிசையாக நடந்தது. மணப்பெண் ஜனனி, விஜய்க்குப் பொருத்தமாக அழகாக இருந்தாள்.

முதல் நாள் அறிமுகப்படுத்தியவுடனே நட்புடன் பழகிய ஸ்ருதியை அவனுக்கு மிகவும் பிடித்தது. மறுநாள் திருமணத்தின் போது வேறு விதமாக ஜொலித்தாள் ஸ்ருதி! குஜராத்தி முறையில் தலைப்பை முன்புறம் வைத்து சேலை அணிந்து, கூந்தலில் முத்துக்கள் பதித்த தலை அலங்காரத்துடன் மேடையில் பட்டாம்பூச்சியாய் வலம் வந்து கொண்டிருந்தாள்.

"என் பேத்திக்கு என்னோட கண்ணே பட்டுடும் போல இருக்கு!" என்று கூறி திருஷ்டி கழித்து மகிழ்ந்தாள் பார்வதம். ப்ரகதீஷின் விழிகளும் அவளையே தொடர்ந்து கொண்டு இருந்தன. தன்னுடைய அம்மா அப்பாவிற்கு அங்கிருந்தே அவளை அறிமுகம் செய்தான் அவன்.

இதுவரைக்கும் பெண்களிடத்தில் பெரிதாக அவன் எந்தவித ஆர்வமும் காட்டியதில்லை என்பதால் இன்று அவன் செய்வது அவர்களிடம் வியப்பையும், யோசனையையும் வரவழைத்தது. அவனுடைய அம்மா நீலாவுக்கு முதலில் எதுவோ புரிந்தும் புரியாதது போல்... ஆனால் அலைபாயும் அவன் விழிகள் எல்லாவற்றையும் புரிய வைப்பதாய்!

ஸ்ருதியின் விழிகளும் அன்று காலையிலிருந்தே அவன் முகவரி தேடித் தவித்தன. என்னவோ தனக்கே உரிய ஒருவனை ஜென்ம ஜென்மமாய் உறவில் கலந்து தன்னுடன் இணைந்திருந்தவனைக் கண்டது போல் இருந்தது அவளுக்கு!

அவனுக்காகவே இத்தனை வருடங்களாகத் தான் மலர்ந்து காத்திருந்தது போல் ஒரு உணர்வு! தான் ஏன் இப்படி



உணர்கிறோம் என்ற கேள்விக்கு அவளிடம் விடைதான் இல்லை.

ப்ரகதீஷும் அதே மனநிலையில் இருந்தான். பி.இ. முடித்து இந்த ஐந்து வருடங்களாக வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வருபவனுக்கு, தனக்குள் நேர்ந்த மாற்றத்தை நினைத்தால் விந்தையாக இருந்தது... மிகவும் குழம்பி இருந்தான் அவன்.

கல்யாணம் முடிந்து அனைவரும் பரிசைக் கொடுத்து விட்டு விடைபெற்றுச் செல்லும் போது தன் பெற்றோருடன் மேடையேறி வந்தான் அவன். அவர்களை விஜயின் குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்தியவனின் கண்கள் ஸ்ருதியைத் தேடின.

விஜய்க்கும் ஜனனிக்கும் கொடுப்பதற்காக கூல்ட்ரிங்க்ஸுடன் வந்தவளை, மாமி அவனுடைய அம்மாவுக்கு அறிமுகப்படுத்தினார். ப்ரகதீஷ் அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றபோது அவளுடைய இமைகள் காதல் சிறகாய் விரிய, அவன் பார்வை புவிஈர்ப்பு விசையாய் அவளையே நோக்க, தன்னில் பாதியைத் தொலைத்தது போலத் துடித்துப் போனாள் ஸ்ருதி.

அந்த நிமிடம், எத்தனை காலமானாலும் அவனுக்காகத் தான் காத்திருக்க வேண்டும் என்ற உறுதி அவளுக்குள் எழுந்தது.

முதல் பார்வையிலேயே தன்னை ஒருவனால் வீழ்த்திவிட முடியுமா என்ற கேள்வி மனதில் எழுந்தது. ஆனால் அவளைத் தன்வசப்படுத்தி விட்டு அவன் மட்டும் சென்று விட்டதும் புரிந்தது.

திருமணமும் மறுவீடு அழைப்பும் முடிந்து இன்றுதான் ஸ்ருதி கோயம்புத்தூருக்கு கிளம்புகிறாள். சித்தியும் வருவதால், மனம் உற்சாகமாக இருந்தாலும் இந்த முறை தன் இதயத்தை அந்தப் பிரதேசத்திலேயே விட்டுச் செல்வது மட்டும் புரிவதாய்!

விஜய், மாமியார் வீட்டுக்குச் சென்றிருந்ததால் ஃபோனில் விடைபெற்றுக் கிளம்பும்போது பாட்டியின் அணைப்பும், கண்ணீருமே அவளுக்குத் துணையாய்! வழி முழுவதும் எல்லோரும் பேசிக் கொண்டே வந்தபோதும் ஸ்ருதியின் மனம் மட்டும் ப்ரகதீஷின் நினைவுகளிலேயே ஆழ்ந்திருந்தது.

கோயம்புத்தூருக்கு வந்ததிலிருந்து தினமும் சித்தியுடன் ஊர் சுற்றுவதற்கும் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்வதற்குப் பொருட்கள் வாங்குவதற்குமே அவளுக்கு பொழுது சரியாக இருந்தது. அன்றும் இருவரும் கடைக்குச் சென்று திரும்பியபோது, தஞ்சாவூரிலிருந்து ஃபோன் வந்தது. ஸ்ருதியின் மாமாதான் பேசினார்.

அவரிடம் பேசிவிட்டு வந்த வாசுதேவன், "ரமணி! உங்க ண்ணன்தான் பேசினார். விஜயோட கல்யாணத்துல நம்ம ருதியப் பாத்துட்டுப், பெரிய பணக்கார இடத்துல இருந்து பாண்ணு கேக்கறாங்களாம்... பையன் வீடும் தஞ்சாவூர் க்கத்துலயே தானாம். பெரிய மில் ஓனராம்... விரும்பிக் கட்டதாலே ரொம்ப நல்ல இடம், ஒரே பையன்னு ருதியோட ஜாதகத்தைக் குடுத்தாராம். நல்லாப் பொருந்தி ருக்காம். நமக்கும் ஒரு ஜாதக காப்பி குரியர்ல அனுப்பி ருக்கேன்னாரு... நமக்கு விருப்பமிருந்தா, அடுத்த வாரமே



அவர்களை அழைச்சிட்டு பொண்ணு பாக்க வரேங்கறார்..." என்றவரின் குரலில் பெரும் மகிழ்ச்சி தெரிந்தது.

ஸ்ருதியின் முகம் காற்று தீண்டிய அனிச்ச மலராய் உடனே சுருங்கிப் போனது. ப்ரகதீஷின் நினைவுகளை மட்டும் கனவுக் கூடு செய்து சேமித்து வைத்திருந்த உள்ளம் உடனே வாடியது. 'அவன் சென்னையில் அல்லவா இருக்கிறான். என்னை நினைவு வைத்திருப்பானா? என்னை அவன் விரும்புகிறானா என்பதே தெரியவில்லையே..' மனதில் கவலை வந்தது.

இமைக்கும் நொடிக்குள் மனதில் ஆயிரம் கேள்விகள் எழும்பின. என்ன சொல்லி இந்த வரனைத் தட்டிக் கழிக்கலாம் என்ற யோசனை உள்ளத்தில் பெரிதாய்! விஜயிடம் ஜம்பமாக "இரண்டு வருடம் வேலை பார்த்துவிட்டு பிறகுதான் திருமணம் செய்து கொள்வேன்' என்று கூறிவிட்டு இப்போது ப்ரகதீஷைப் பற்றி கேட்கவும் தயக்கமாய் இருந்தது.

விமலாவிடம் மெதுவாக, "சித்தி... நீங்களாவது அப்பா கிட்டே சொல்லுங்களேன்! எனக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லை. அப்புறமா பண்ணலாம்னு சொல்லுங்களேன்.." கெஞ்சலாகக் கூறினாள்.

"நான் எப்படி அத்தான்கிட்டே இதப்பத்திப் பேசறது? வேணும்னா அக்காட்ட பேசறேன். அவர் ரொம்ப கோபக்காரருன்னு உனக்குத் தெரியாதா ஸ்ருதி..?"

"ப்ளீஸ் சித்தி... எனக்காக நீங்க பேசித்தான் ஆகணும்!" என்று கேட்ட பிறகு மறுக்க முடியாமல், "சரி... நான் முதல்லே அக்கா என்ன சொல்றாங்கன்னு பாக்கறேன். அவங்க ஒபீனியன் என்னன்னு தெரிஞ்சுக்கலாம்" என்று தைரியம் கூறினார்.

ரமணியிடம் கூறிவிட்டு, வாசுதேவனிடம் பேசியபோதும் அவர் இந்த விஷயத்தில் மிகவும் பிடிவாதமாக இருந்தார். யார் சொல்லியும் கேட்கவில்லை. அந்த வாரமே குடும்ப ஜோசியரிடம் சென்று ஜாதகம் பார்த்து, நன்றாகப் பொருந்தி யதால், ஃபோனிலேயே எல்லாம் பேசி முடித்து அவர்களை வரும்படி கூறிவிட்டார்.

அந்த ஞாயிற்றுக்கிழமை அவளைப் பெண் பார்க்க வருவதாக மாப்பிள்ளை வீட்டிலிருந்து தகவல் வந்ததும் ருதி இறுகிப் போய் விட்டாள். அவள் விருப்பத்துக்கு திப்பில்லையே என்ற ஆதங்கத்தில் எதிலுமே ஆர்வம் ட்டவில்லை.

விமலாதான் அவளை சமாதானப்படுத்தினார். ''ஸ்ருதி! ாண்ணு பாக்கறதுக்குத்தானே வராங்க... வந்து பாத்துட்டுப் ாகட்டும், விடு! உடனே என்ன கல்யாணமா நடக்கப் ாகுது? எதுவுமே உனக்குப் பிடிச்சாத்தான் நடக்கும்'' றார்.

எனக்கு யாரையுமே பிடிக்காது... ப்ரகதீஷைத் தவிர!' என்று ள் மனம் அழுத்தமாய் முணுமுணுத்தது. 'ஏன் இந்தப் ன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாள்' என்று ற்குள்ளேயே யோசித்தபடி விமலா மௌனமாக எழுந்து றார்.

ாயிற்றுக்கிழமையும் வந்தது. ரமணியும், விமலாவும் வருக்கும் டிபன் தயார் செய்துவிட்டு, ஸ்ருதியையும் கரித்து முடித்துக் காத்திருந்தனர். ஆனால் ஸ்ருதியின் முழுவதும் ப்ரகதீஷே நிறைந்திருந்தான்.



## 3

*நீ வரும் முன்பே...*
*உன் இனிய வருகையை...*
*மென் சலங்கை ஒலியால்...*
*கவிதையாய் அறிவித்திடும்*
*காதல் கீதமாய்...!*

ப்ரகதீஷின் மனம் அன்று மிகவும் மகிழ்ச்சியாய்... இன்னும் சிறிது நேரத்தில் தன் மனதுக் கினியவளைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைவே பரவசம் தருவதாய்! அவனுடைய மனம் தவிப்புடன் காத்திருந்தது.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து எல்லோரும் வந்துவிட்டதாக விமலா கூறியபோது, ஸ்ருதியின் மனம் முழுவதும் வெறுப்புக் குமிழ்கள் வெடித்துச் சிதறின. மனதில் ஒரு முடிவு அழுத்தமாய் நிறைந்தது. அதனாலேயே ஊரிலிருந்து வந்திருந்த மாமா உள்ளே வந்து அவளிடம் பேசியபோதும் தன் மனதின் சோகத்தை திரை வைத்து மறைத்து, இதழ்க்கிடையே ஒரு புன்னகையை சிறை வைக்க முடிந்தது.

சிறிது நேரத்தில் அவளை வரவேற்பறைக்கு அழைத்துச் சென்ற போது முன்பே முடிவு செய்திருந்தபடி அவள் தலை நிமிரவும் இல்லை... மாப்பிள்ளையைப் பார்க்கவும் இல்லை! பிடிவாதத்துடன் சேர்ந்து மனமும் மரத்துப் போய் இருந்ததால் கண்களில் எதுவுமே பதியவில்லை. அமைதியாகத் தலைகுனிந்து அமர்ந்திருந்த போதும் உள்ளே எரிதழலாய் தகித்தது மனது.

அவள் வரும் ஓசை ப்ரகதீஷின் இதயத்தை தட்டி எழுப்புவதாய்! அவன் விழிகள் அவளையே அளவிட்டன.

அழகிய ட்யூலிப் மலர்களைப் போல் குவிந்த கைகளையும், இமைகளைக் குடையாய்ப் பிடித்த கீழ்ப் பார்வையையும் அவன் வெகுவாய் ரசித்தான். பெரியவர்கள், அவள் வெட்கத்தால் தலைகுனிந்திருப்பதாக நினைத்தனர்.

பிறகு அவளை உள்ளே அழைத்து வந்த பிறகு, ரமணியும் கூடவே வந்தார். "ஏம்மா! நீயாவது சொல்லக் கூடாதா... எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு..." என்று ஸ்ருதி சீறியபோது அவர் ஒரு முடிவுடன் "ஸ்ருதி! உங்க அப்பாவே என்னை வறுத்தெடுத்துட்டு இருக்கார்.. விஜய் கல்யாணத்துல அவருக்கு சரியா மரியாதை தரலை. அது இதுன்னு... இப்ப நான் எது பேசினாலும் அவருக்குத் தப்பாத்தான் தெரியும். நீயும் என்னைப் புரிஞ்சுக்க மாட்டேன்கிறியே?" என்றார் வருத்தத்துடன்.

ஒரு பெருமூச்சுடன் அமர்ந்திருந்தவள், ப்ரகதீஷின் பூர்வீகமே தஞ்சைக்குப் பக்கத்திலிருக்கும் கிராமம்தான் என்பதையும், அவனுடைய அப்பா அங்கு பெரிய மில் ஓனர்... அவன் மட்டுமே சென்னையில் சாஃப்ட்வேர் நிறுவனத்தை நடத்துகிறான் என்பதையும் அறியவில்லை. திடீரென்று வாசுதேவன் அவள் அருகில் வந்து அமர்ந்து, "ஸ்ருதி! உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா? எங்க எல்லாருக்கும் அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு... நீ என்ன சொல்றே? நான் அவங்க கிட்ட நல்ல முடிவா சொல்விடலாம்னு நினைக்கிறேன்!" மெதுவாகக் கேட்டார்.

"அப்பா.. ப்ளீஸ்! எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம். நான் முதல்லே ஒரு வேலைக்குப் போறேன். ஒரு வருஷம் போகட்டும்ப்பா..." அவள் குரலில் தவிப்பு மிகுந்திருந்தது.



"கல்யாணம் செஞ்சுக்கிட்டா சுதந்திரம் போயிடும்னு நீ சொன்னதா சித்தி சொன்னா. உங்க அம்மாவுக்கெல்லாம் பதினாறு வயசுல கல்யாணமாச்சி... இப்ப அவ சந்தோஷமா இல்லையா? மாப்பிள்ளைய உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா...? அத முதல்ல சொல்லு."

"எந்த மாப்பிள்ளையா இருந்தாலும் எனக்குப் பிடிக்காதுப்பா... எனக்கு இப்ப இந்த கமிட்மென்ட்டெல்லாம் வேண்டாம்" எங்கிருந்துதான் வேகம் வந்ததோ, கூறிவிட்டாள்.

கோபத்துடன் எழுந்தவர், "அப்படியா... சரி! ஆனா, எங்க எல்லாருக்கும் அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு. இதைவிட ஒரு நல்ல அலயன்ஸ் நமக்கு கிடைக்காது அப்படின்னு நான் நினைக்கிறேன். நான் பாத்துக்கறேன்!" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு வேகமாக வெளியே சென்று விட்டார்.

ஹாலில் காத்திருந்த அனைவரிடமும் மாப்பிள்ளையைப் பிடித்திருப்பதாக வாசுதேவன் கூறியவுடன் ப்ரகதீஷின் மனதில் உற்சாகப் பூக்கள் மலர்ந்தன. பரமசிவம் அவனைக் கேள்வியாய் பார்த்தபோது தந்தையிடம் சம்மதமாக அவன் தலையசைக்கவும், உடனே தாம்பூலத் தட்டை மாற்றிக் கொண்டனர்.

மனம் நிறைந்த மகிழ்ச்சியில் மூச்சு முட்டியதால் அவனுக்கு ஏனோ வெளிக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் போல்! "அப்பா! ஒரு நிமிஷம்... வெளியே போயிட்டு வரேன்.." என்று தோட்டத்திற்கு வந்தவன், ஸ்ருதியை தான் சந்தித்த முதல் நிமிடத்தை மனதில் கொண்டு வந்தான்.

முன்புறமிருந்த தோட்டத்தில் இருந்த ஒரு மலர் அவன் கவனத்தைக் கவர்வதாய்! அருகில் சென்று பார்க்க வேண்டும்

என்று தோன்றும்போதே அவனுக்குள் வியப்பு மட்டுமே எழுவதாய்! இன்று மட்டும் ஏன் இப்படி மனம் தவிக்கிறது என்ற கேள்விக்கு சிறு புன்னகை மட்டுமே பதிலாய்! காதல் கொண்ட உள்ளம், தன்னை ரசிகனாக்குவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அந்தச் செடியின் அருகில் சென்றபோது திடீரென அருகில் இருவர் பேசிக் கொள்ளும் சப்தம் கேட்டது. அவன் ஸ்ருதியின் அறை ஜன்னல் அருகே வந்திருந்தான். அங்கு கேட்ட அவளுடைய வார்த்தைகள் அவனுக்கு இடியாய் இறங்கியது.

''எனக்கு எதுவுமே பிடிக்கலை சித்தி.. இந்த மாப்பிள்ளையையும் சேத்துத்தான் சொல்றேன்! இவர் என்ன.. வேற யார் வந்தாலும் எனக்குப் பிடிக்காது'' அழுத்தமாகக் கூறியது அவள் குரல். அந்தக் குரலில் அவன் உலகமே ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனது.

''என் ஸ்ருதி.... காரணமும் சொல்ல மாட்டேன்றே... பிடிக்கலைங்கிற ஒரே பிடிவாதத்துல இருந்தா என்ன பண்றது? அவங்க பெரிய பணக்கார இடமாம்... அங்கே உங்க அப்பா எல்லாம் முடிவு பண்ணிட்டார். தட்டு கூட மாத்திட்டாங்க தெரியுமா?''

''அவங்க முடிவு பண்ணினா என்ன? பணத்தாலே எல்லாத்தையும் விலைக்கு வாங்க முடியாது சித்தி... அதுவும் முக்கியமா ஒரு பெண்ணோட மனசை! நான் அந்த மாப்பிள்ளை கிட்டப் பேசி இந்தக் கல்யாணத்தை நிறுத்தச் சொல்வேன்..''

''அந்த அளவுக்கு இந்த மாப்பிள்ளை மேல என்ன வெறுப்பு உனக்கு? காரணம் சொன்னாலாவது உங்கப்பா



கிட்டே பேசலாம்...'' விமலா கோபமாகக் கேட்க, ''சரி, சித்தி! இப்ப சொல்றேன். என் மனசுல வேற ஒருத்தர் இருக்கார். அவரைத் தவிர யாருக்குமே என் மனசில இடமில்லை! அவ்வளவுதான்... இப்பப் புரியுதா?'' என்றாள் கோபமாக.

அவளுடைய வார்த்தைகள் அவன் மனதை எரிமலையாக்கியது. வார்த்தைகளின் வலித் தடங்கள் மனதில் தழும்பாய் பதிந்தன. செவிகள் கூர்மையாகின.

விமலா அவளிடம், ''இதை நீ முன்னாடியே சொல்லி இருக்கலாமே... கல்யாணம் வேண்டாம்னு - புரியாம நீ வறட்டு பிடிவாதம் பிடிக்கறதா நான் கூட நினைச்சேன். இவ்வளவு முக்கியமான விஷயத்தை நீ ஏன்டி மறைச்சே?'' ஆதங்கத்துடன் கேட்டார்.

''சித்தி! நான் கல்யாணம் வேண்டாம்னு சொன்னதுக்கே, அப்பா இவ்வளவு கோபப்பட்டாரே? இதுலே நான் வேற ஒருத்தரை விரும்பறேன்னு எப்படிச் சொல்றது? இந்த நாட்டுல பெண்களுக்குத்தான் கருத்துச் சுதந்திரமே இல்லையே... அதுவும் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கறதிலே! ஒரு புடவையோ நகையோ வாங்கறப்ப பத்து தடவை புடிச்சிருக்கான்னு கேப்பாங்க.. ஆனா மாப்பிள்ளை பிடிக்கலைன்னா மட்டும் விட மாட்டாங்க'' கோபத்துடன் பொரிந்தாள்.

''சரி.. பொறுமையா இரு! பாப்போம்'' என்றார் விமலா யோசனையுடன்! வெளியில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தவனின் உள்ளம் தீயாய்! இலைகள் உதிர்ந்த கிளைகளின் தழும்பாய் மெல்ல அவனுடைய மனதிலிருந்து அவள் உதிர்ந்து விட, நினைவுகள் மட்டும் ரணமாய்! அவள்

வேறு யாரையோ விரும்புகிறாள் என்று தெரிந்ததுமே ஒன்றுமே புரியவில்லை. நான் இதுவரை எந்தப் பெண்ணிடமும் இதுபோல் மனதை இழந்ததில்லை என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அந்த நிமிடம், தான் நினைத்ததை அடைந்தே தீர வேண்டும் என்ற வெறியும், தன்னை நிராகரித்த அவள் மேல் வன்மமும் சேர்ந்து அவனுக்குள் ஈகோ தலைதூக்கியது. அவளைத் திருமணம் செய்து அவளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்... அதே சொற்களால் அவளை வீழ்த்தி, பழிவாங்க வேண்டும் என்றும் வந்த குரோத மனப்பான்மையில் அவனுக்குள் இருந்த இதயம் தன் மென்மையைத் தொலைத்தது.

தான் விரல் சொடுக்கினால் அவள் தன் மடியில் வந்து விழ வேண்டும் என்ற வேட்கை, திருமண முடிவாய் மனதில் உறுதியுடன் நிறைய... உள்ளே வந்தவன் தன் தந்தையிடம் உடனே திருமண ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறினான்.

அவன் பார்வையிலிருந்த நேசம் மறைந்து இப்போது வெறுப்பு வந்திருந்தது. விருப்பத்துக்கும் வெறுப்புக்கும் இடையே ஒரு சிறு நூல் அளவுதான் இடைவெளி உண்டு ன்பதை அவள் பேச்சு நிஜமாக்கி இருந்தது.

தன் மனம் கவர்ந்தவனின் மன நிலையைப் பற்றி தையுமே அறியாத ஸ்ருதி, அறைக்குள் மௌன யுத்தம் ய்யும் மனதுடன் கோபமாக அமர்ந்திருந்தாள். மாப்பிள்ளை ட்டினர் கிளம்பிச் சென்ற பிறகும் அவள் யாரிடமும் சவில்லை. மாமா ஊருக்குக் கிளம்புவதாக விடைபெற தபோதும் அமைதியாகவே விடை கொடுத்தாள்.



விமலாவும் மறுநாள் ஊருக்குக் கிளம்ப வேண்டி இருந்ததால் அன்று மாலை மெதுவாக வாசுதேவனிடம், ஸ்ருதிக்கு இதில் விருப்பமில்லை என்று கூற, அவர் தாம் தூமென்று குதிக்க, கடைசியில் தோல்வியே மிஞ்சியது.

ஸ்ருதியை அமைதிப்படுத்திய விமலா, ''நீ ரொம்ப புத்திசாலி ஸ்ருதிம்மா! நாம விரும்பறவங்களை விட நம்மை விரும்பறவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை நிச்சயமா நல்லா இருக்கும். மாப்பிள்ளை வீட்டில உன்னை விரும்பி வந்திருக்காங்க.. நிச்சயமா நீ நல்லா இருப்பே! உன் கல்யாணத்துக்கு என்னால உடனே வர முடியாது. அடுத்த வருஷம் கட்டாயம் வருவேன். அப்ப நீ சந்தோஷமா இருக்கறதை நான் பாக்கணும்'' என்று புன்னகையுடன் கூறினார்.

மறுநாளே அவளுக்கு அழகிய நகை செட் ஒன்றை வாங்கிப் பரிசளித்து விட்டு அன்றிரவே விமானத்தில் சென்னைக்குக் கிளம்பினார். அங்கிருந்து நாளை காலை ஃப்ளைட்டில் அமெரிக்காவுக்குச் செல்கிறார். வாசுவும் அவருடன் சென்னைக்குச் செல்ல, அவளும் ரமணியும் விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் விஜய்க்கு ஃபோன் செய்து பேசி, ப்ரகதீஷைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது ஸ்ருதிக்கு.

அவனுடைய செல்லுக்குத் தொடர்பு கொண்டபோது, மறுமுனையில் அவனுடைய உற்சாகக் குரல் கேட்டது. ''கங்கிராட்ஸ் ஸ்ருதி! நான் இன்னிக்கு ஈவினிங்தான் ஹனிமூன் ட்ரிப்லேருந்து வந்தேன். என்ன.. முதல் பார்வையிலேயே என்னோட ஃப்ரண்டை வளைச்சிட்டியா? அவங்க அப்பா, அம்மாவுக்கு உன்னை என் கல்யாணத்துல

பாத்தப்பவே ரொம்பப் பிடிச்சிப் போச்சாம். கல்யாணமே பேசி முடிச்சிட்டாங்களாமே! உனக்கு நான் ஃபோன் டிரை பண்ணிட்டே இருந்தேன். வீட்டுல ரிங் போயிட்டே இருந்தது. ஏர்போர்ட்டுக்கு அத்தையை அனுப்பப் போயிருந்தீங்களா?''

''ஆமாம் விஜய்... நீ யாரைப் பத்திச் சொல்றே?'' என்றாள் ஸ்ருதி புரியாத குரலில்.

''ஏய்.. நடிக்காதே! ப்ரகதீஷைத்தான் சொல்றேன். ஏம்மா! கல்யாணம் முடிவான சந்தோஷத்துல ஒன்னும் புரியலையா? நான் வந்ததுமே அப்பா சொன்னாங்க. அடுத்த மாசம் கல்யாணமாமே? எப்பவும் போல இப்பவும் கிண்டல்தானா உனக்கு? நான் உடனே ப்ரகதீஷ் கிட்டப் பேசறேன்..'' என்று அவன் வைத்தபோது ரிஸீவர் கைகளிலிருந்து நழுவ, இதயம் இடம் பெயர்ந்தது.

ஒரு கணம் நம்ப முடியாமல் மனம் தடுமாறியது. 'ப்ரகதீஷா என்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளை? அவனையா வேண்டாம் என்று சண்டை போட்டேன்?' அவளுக்கு ஒரே நேரத்தில் அழ வேண்டும் போலவும், சிரிக்க வேண்டும் போலவும் இருந்தது. வேகமாய் படபடத்த மனம், பரவசமாய்த் துடித்தது.

## 4

**என் இதயம் தொலைந்த இடம்...**
**எதுவென்று நான் தேடியபோது...**
**அது இங்கிருக்கிறதென்று...**
**கர்வத்துடன் கூறுகின்ற**
**காதல் சின்னமாய்!**



ஸ்ருதியின் மனதில் ஆயிரம் குயில்கள் ஒன்றாக இசைத்ததுபோல்! மனம் லேசாகி சிறகுகள் முளைத்து காதல் வானில் பறக்க, இதை யாரிடமாவது உடனே பகிர்ந்து கொள்ள வேண்டும் போல்...! சித்தியிடம் இப்போது பேச முடியாது. அவள் அமெரிக்காவுக்குச் சென்ற பிறகுதான் பேச முடியும் என்று நினைக்கும் போதே மூச்சு முட்ட, தன்னை அமைதிப்படுத்திக் கொண்டாள் அவள்.

அங்கு விஜய், உடனே ப்ரகதீஷிடம் பேசினான். ''ப்ரகதீஷ்.. என்ன எனக்குத் தெரியாம என்னென்னவோ நடந்திருக்கு... எந்தப் பெண்ணாலும் உன்னை அசைக்க முடியாதுன்னு சொல்லுவே? ஸ்ருதி உன்னை அசைச்சுட்டாளா?'' குறும்புடன் அவன் கேட்டபோது எதிர் முனையில் மௌனமே பதிலாய்!

சிறிது நேரத்துக்குப் பிறகு. ''அம்மா, அப்பா ரொம்ப ஆசைப்பட்டாங்க.. அதான்! நீ இன்னிக்குத்தான் வரதா அங்கிள் சொன்னார். ஹனிமூன்ல உன்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாமேன்னுதான் சொல்லலை'' என்றான் மெதுவாக.

''கங்கிராட்ஸ்! எனக்கு ரொம்ப சந்தோஷம்டா... ஆல் தி பெஸ்ட்!'' என்று இணைப்பைத் துண்டித்தான் விஜய்!

சித்தியிடமிருந்து ஃபோன் வரும்வரை, தவிப்புடன் இருந்த ஸ்ருதி அவர் பேசியதுமே கார்ட்லஸ்ஸுடன் தன் அறைக்கு வந்தாள். ''சித்தி! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்! உங்களுக்குத் தெரியுமா... என்னைப் பெண் பார்க்க வந்ததும் நான் விரும்பின ப்ரகதீஷும் ஒருத்தரேதான்! விஜய் சொல்லித்தான் எனக்கே தெரிஞ்சுது!'' உற்சாகத்தில் வார்த்தைகள் தொண்டை நடுவே சிக்கித் தவித்தன.

''இதை உங்ககிட்டே உடனே சொல்லணும்னு எவ்வளவு தவிச்சேன் தெரியுமா? நான் அவரைப் பாக்காமலே

உங்ககிட்டே எல்லாம் எவ்வளவு ஆர்க்யூ பண்ணி இருந்திருக்கேன்! நான் இப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன் சித்தி! அப்புறம்... ஒரு விஷயம்! நான் அவரை முன்னாடியே விரும்பின விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்... ப்ளீஸ்! அப்புறம் அப்பா ரொம்பத் தப்பா நினைச்சுப்பார். விஜய் கிட்டே கூட சொல்லாதீங்க. எனக்கு அப்பப்ப நீங்க ஃபோனிலே பேசணும்... சித்தப்பாவை ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லுங்க!'' என்று கூறிவிட்டு வைத்தாள்.

திருமணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் வேகமாக நடந்து கொண்டு இருந்தன. திடீரென்று அவள் மனம் தனிமையைக் காதலிக்க ஆரம்பித்தது. சுற்றிலும் சந்தோஷ மலர்கள் மலர்ந்து மணம் வீசியது. மகளிடம் தெரிந்த மாற்றத்தைக் கண்டு வாசுவும், ரமணியும் மிகவும் மகிழ்ந்தனர்.

திருமணத்துக்கு முதல் வாரம் விஜய் அவளிடம் பேசிய போது ''விஜய்! நீ எனக்கு ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா? எனக்கு அவரோட செல் நம்பர் கொஞ்சம் கொடேன்...'' என்றாள் ஸ்ருதி மெதுவாக.

''எவரோ? எனக்குப் புரியலையே?'' குறும்புடன் கேட்டான் விஜய். அவளும் ''போடா.. ம்.. ப்ரகதீஷோடதுதான்'' ...ணுங்கலுடன் கூறினாள்.

''அப்படிச் சொல்லும்மா... அவரோட இவரோடன்னா ...க்கு என்ன புரியும்...? நாட்டில பொம்பளைங்கல்லாம் ...ாஞ்சம் புரியற மாதிரிப் பேசுங்க'' என்றான் கேலியாக. ...ான்னபடி ப்ரகதீஷின் செல் நம்பரைக் கொடுத்தான். ...ணியிடமும் பேசிவிட்டு வைத்தவள் உடனே ப்ரகதீஷின் ...ல்லுக்குத் தொடர்பு கொண்டாள்.



''ஹலோ!'' அவனுடைய ஆழ்ந்த குரல், அவள் இதயத்துக்குள் செல்லச் சீண்டலாய்! மெதுவாக, ''நான் ஸ்ருதி பேசறேன்..'' என்றவுடனே ஒரு நொடி எந்த சப்தமும் இல்லை.

பிறகு, ''நான் ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருக்கேன். நானே அப்புறமா உன்னைக் காண்டாக்ட் பண்றேன்..'' என்று உடனே வைத்துவிட்டான் ப்ரகதீஷ். மனதினுள் பொங்கிக் கொண்டிருந்த உற்சாகம் உடனே வடிந்தது போலிருந்தது அவளுக்கு!

அங்கு ப்ரகதீஷ் தன் செல்லையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். காதலித்து மறுக்கப்பட்ட வலி, இதயம் முழுவதும்! ஆனால் அவளை மட்டும் இழக்கக் கூடாதென்ற உறுதி மனதில் நிறைந்தது. 'என்கிட்டே கல்யாணத்தை நிறுத்தச் சொல்லிச் சொன்னா, உடனே நிறுத்திடுவேனா? உனக்காக என் கைவசம் எத்தனை தண்டனை காத்திட்டிருக்கு தெரியுமா?' மனம் சீற்றத்துடன் நினைத்தது.

திருமண நாளும் நெருங்கி வர, அவன் தன்னிடம் பேசுவானென்று எதிர்பார்த்து ஸ்ருதி தினமும் காத்திருந்தாள். ஒவ்வொரு விடியலும் அவன் நினைவுகளைச் சுமந்தபடி விடிந்தது. ஆனால் அவள் மனம் காற்றுப் போன பலூனாய் சுருங்கியது. ப்ரகதீஷ் அவளிடம் பேசவே இல்லை.

ஊரிலிருந்து அனைவரும் வந்துவிட வீடு கல்யாணக் களை கட்டியது. அம்மாச்சி அவளுடனே இருந்து, பெரியவராக எல்லாவற்றையும் முன்னின்று செய்தார்.

திருமணத்திற்கு முதல் நாளும் ப்ரகதீஷ் ஏதோ ஒருவித இறுக்கத்துடனே இருந்தான். அவளால்தான் ஏன் என்று இனம் கண்டுகொள்ள முடியவில்லை. அவளுடைய ஒவ்வொரு

பார்வையும் அவன் உள்ளத்தை சந்திக்க விரும்பி ஏமாற்றத்தோடு திரும்பியது.

திருமணம் சிறப்பாக முடிந்தது. அவனுடைய ஓரப் பார்வையும், செல்லச் சீண்டல்களும் இல்லாமலேயே! அன்று மாலையே அவர்களிருவரும் ஊட்டி கிளம்பி விட்டனர். ப்ரகதீஷ் அவர்களுக்கென்று அங்கு ஒரு ஹனிமூன் காட்டேஜ் புக் செய்து வைத்திருப்பதாக விஜய் அவளிடம் கூறியபோது, அவள் விழிகளில் நாணத்தின் சாயல்!

அன்று மாலையில் அனைவரிடமும் விடை பெற்றுக் கிளம்பும்போது ஏனோ அவளுக்குக் கஷ்டமாகவே தெரியவில்லை. தன் மனதிற்கினியவனுடன் செல்லப் போகும் மகிழ்ச்சியே முற்றிலும் தெரிந்தது. அவனையே சில காலமாக மனதில் சுமந்திருந்ததால் ப்ரகதீஷை அன்னியனாகவே நினைக்கத் தோன்றவில்லை. அவனிடம் மனம் திறந்து பேசி தன் காதலை உடனே கூற வேண்டும் போல்!

காரில் டிரைவர் இருந்ததால் இருவருமே அமைதியாகவே இருந்தனர். சுற்றிலும் தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவே அவர்களுடைய காட்டேஜ் அழகாய்த் தெரிந்தது. இருவரும் உள்ளே போனதும், டிரைவர் பொருட்களை வைத்து விட்டுச் சென்ற பிறகு கதவை மூடி விட்டு அவளிடம் திரும்பினான் ப்ரகதீஷ். அந்த முகத்தில் அவள் எதிர்பார்த்த நேசம் சிறிதளவு கூடத் தெரியவில்லை.

எந்த உணர்ச்சியுமின்றி ஏகாந்தமாக இருந்த அவன் பார்வை, சில்லென்று அவளுக்குள் உட்புகுந்து படபடப்பை ஏற்படுத்துவதாய்!



''உக்காரு... உன்கூட கொஞ்சம் பேசணும்..'' அவன் குரலில் ஒரு விலகல் தன்மை! ''நானும்தான் உங்க கூட நிறைய பேசணும்..'' அவள் மனம் பரவசமாய் கூறியது.

அவளையே கண்கள் இடுங்க ஒரு புருவச் சுளிப்புடன் ஏறிட்டவனின் உதடுகளில் ஒரு விரக்திப் புன்னகை ஓடியது. ''உன்கிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும். நீ என்கிட்ட அதிகமா எதையும் எதிர்பாக்கறதுக்குள்ளே அத சொல்லிடறது நல்லது இல்லையா?'' ஒரு வேகமான மூச்சுடன் நிறுத்தியவன் தொடர்ந்தான்.

''நான் ஒரு பொண்ணை உயிராக் காதலிச்சேன்... அவதான் எல்லாமே... என் வாழ்க்கைத் துணையாவும் வரணும்னு நான் விரும்பினேன். அந்த அளவுக்கு அவ என்னைத் தன்வசப் படுத்திக்கிட்டா! இன்னிக்கும் என் மனசுல அவதான்... ஆனா, அவ இப்ப இல்லை. என்னை விட்டு ரொம்ப தூரம் தொலைஞ்சு போயிட்டா..'' என்று கூறும்போதே அவன் முகம் இறுகியது.

அவன் வார்த்தைகளைக் கேட்டவுடன், ஸ்ருதியின் முகம் வெளுத்து, மனசு பதறித் துடித்தது. வானம் கூட தொட்டு விடும் உயரத்தில்... அவனோ தொட முடியாத தூரத்தில் இருப்பது போல் உள்ளம் பரிதவித்தது. அவன் குரல் எங்கோ தூரத்திலிருந்து ஒலிப்பது போல் தொடர்ந்தது.

''இது என் அப்பா, அம்மாவோட விருப்பத்துக்காக நடந்த கல்யாணம்! இப்ப மனசு முழுக்க என்.. மாயா.. தான் நிறைஞ்சிருக்கா! அவளை என்னால மறக்க முடியாது. என் நண்பனோட கல்யாணத்துல முதல்லே பாத்தவுடனே என் மனசுல நான் செதுக்கி வச்சவ அவ!'' அவன் குரலில் உணர்ச்சிக் குவியல்.

ஸ்ருதியின் இதயம் கண்ணீர் வடிப்பதாய்! 'நானும் உன்னை உன் நண்பனோட திருமணத்துல பார்த்துத்தானே என் மனசைப் பறிகொடுத்தேன்!' அவள் உள்ளம் தவிப்பாய் நினைத்தது. அவன் பார்வை அவளைத் தீண்டியபோது ஸ்ருதி தலைகுனிந்து கொண்டாள். அவன் கண்டுபிடித்து விடுவானோ என்று அஞ்சி காதலை தன் இதயத்துக்கு அடியில் ஒளித்து வைத்தது மனது. தன் வேதனைகளை அவன் கண்டுவிடக் கூடாது என்ற வேகமும் எழுந்தது.

அவளையே ஒரு கணம் இமைக்காமல் நோக்கியவன், "ஆனா என்னை சம்மதிக்க வச்சதே உன் வார்த்தைகள்தான் தெரியுமா? அன்னிக்கு உன்னைப் பெண் பார்க்க வந்தப்போ, எதேச்சையாக தோட்டத்துக்கு வந்த நான் உன் சித்தி கிட்டே நீ பேசினதை எல்லாம் கேட்டேன். அப்பதான் நீயும் யாரையோ விரும்பறது எனக்குத் தெரிஞ்சது.." கண்கள் இடுங்கக் கூறினான்.

"இல்லை... நான்..!" என்றவளை உடனே இடைமறித்தது அவன் குரல். "நான் முதல்லே என்னோட காதலைப் பத்தி சொல்லிடறேன். அப்புறமா நீ பேசலாம். அன்னிக்கு என் மனசை உன் வார்த்தைகள் ஆழமாத் தாக்கிடுச்சி! உடனே என்னை ஒரு முடிவுக்கும் வரவச்சிது! நீயும் யாரையோ விரும்பி இருக்கே! உன்னால அதை நிச்சயமா மறக்க முடியாது. காதலிச்சு மறுக்கப்பட்ட வலி எனக்குத் தெரியும். இதுக்கு ஒரு முடிவு... நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சிக்கிட்டா, ரெண்டு பேருமே அவங்கவங்க முடிவுல உறுதியா இருக்கலாம். அதான் உடனே சரின்னேன்.." என்று முடித்தான்.

"நான்... உங்களை.." அவள் வார்த்தைகள் அதே வேகத்துடன் தடைபட்டன. இன்னொரு பெண்ணை விரும்புகிறேன்



என்பவனிடம் தன் காதலைக் கூறுவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று தோன்றியது. சுய கௌரவமும் தடுத்தது. அப்படிச் சொன்னாலும் அவன் நம்புவானா என்ற சந்தேகமும் உடனே வருவதாய்!

ஆனால் மனம் அவன் பார்வைகளையே பதியம் போட்டது. உதடுகள் பொய் பேசலாம்... கண்கள் பொய் பேசுமா? அவளுக்குத் தெரியவில்லை. அந்த நொடி தன் காதலை மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள் ஸ்ருதி. அத்துடன் உதடு வரை வந்த 'விரும்புகிறேன்' என்ற வார்த்தைகளையும் சேர்த்து!

"என்ன... என்னவோ சொல்ல வந்தே... நிறுத்திட்டே? உன் காதலைப் பத்தி என்கிட்ட சொல்லத் தயக்கமா இருக்கா?" குத்தலாக வந்தது அவன் குரல்.

"இல்லை... அவரும் வேற ஒரு பொண்ணை விரும்புறது எனக்கு இப்பத்தான் தெரிஞ்சது" மெலிந்த குரலில் கூறினாள்.

"ஆனாலும் அவரை மறக்க முடியலை.. இல்லே? என்னை மாதிரித்தான் நீயும் இருக்கே!" இருவருமே உண்மை எது என்பதை உணரவில்லை.

அவளிடம் திரும்பியவன் "நான் விரும்பி உன்னை ஏத்துக்கிட்டதா எங்க வீட்டில நினைக்கிறாங்க. அவங்களை ஏமாத்த வேணாம். நம்ம ரெண்டு பேரைப் பொறுத்த வரைக்கும் நீயும் நானும் என்னிக்குமே தனின்னாலும் நம்ம வீட்டில இருக்கிற பெரியவங்களுக்கு இது தெரிய வேணாம். வெளி உலகத்துக்கு இயல்பான தம்பதி மாதிரியே இருக்கலாம்னு நான் நினைக்கிறேன். அப்புறம்... விஜய்க்கு முக்கியமா தெரியக் கூடாது. அப்புறம் அவன் வருத்தப்படு

வான்.." என்று அவன் முடித்தபோது பெரும் புயல் ஒன்று அவளுக்குள் நீங்காமல் மையம் கொண்டது. மனதில் கண்ணீரின் முகவரி தெரிந்தது.

## 5

*என் மனம் கவர்ந்த*
*உன் அழகு வெட்கத்தை...*
*மென்மையான*
*கால் தடத்திலேயே...*
*செல்லமாக வெளிப்படுத்தும்*
*நாணச் சிரிப்பலையாய்...!*

ஸ்ருதியால் அவன் கூறியவற்றுக்கெல்லாம் மௌனமாகத் தலையசைக்க மட்டுமே முடிந்தாலும் அந்த ஒற்றை மனிதனுக்குள் ஆயிரம் சலனங்கள்.

அவர்களுடைய தேனிலவு முழுவதுமே, தனித்தனி அறைகளில் மனப் பகிர்தலின்றியே வேகமாய் சென்றது. காலையிலிருந்து இரவு வரை இயற்கை மட்டுமே அவளுக்குத் துணையாய்! அன்று மாலை கோயம்புத்தூருக்கு கிளம்பிச் செல்ல வேண்டும்.

ஸ்ருதி காலையில் எழுந்து வெளியில் வந்தபோது விடியல் வெளிச்சக் கதிர்களை பூமிக்கு பரிசளித்துக் கொண்டிருந்தது. எதையுமே ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. என்றாலும், மெதுவாக தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தாள். மலர்களைத் தீண்டிய பூங்காற்று மனதையும் வருட, எண்ண மின்னல்கள் சிந்தனையில் மின்னலிட்டது.

தான் உயிராய் விரும்பிய ஒருவன் தன்னை மறுப்பது பெரும் கொடுமையாய்... தன்னிடம் என்ன குறையென்று



அவளுக்குள் கேள்வி எழும்போதே, அவன் மாயாவை முன்பே விரும்பியதும் அவன் மனதில் அவள் நீங்காமல் நிறைந்திருப்பதும் புரிந்தது.

அவள் பிரிந்து சென்ற பிறகும் அவனால் மறக்க முடியவில்லை என்றால் அந்தக் காதல் எவ்வளவு ஆழமானதாக இருக்கும் என்ற எண்ணமும், தன் நேசத்தை அவன் கடைசி வரை புரிந்து கொள்ளவே மாட்டானா என்ற ஆதங்கமும் சேர்ந்து அவளை அலைக்கழிப்பதாய்! பூபாளமே வேண்டாம் எனும் வானத்தை எண்ணி வியப்பு வருவதாய்!

எங்கிருந்தோ ஒலித்த '***சோலைப் புஷ்பங்களே.. என் சோகம் சொல்லுங்களேன்... கண்ணாளனைக் கண்டாலென்ன... என் வேதனை சொன்னாலென்ன...?***' என்ற பாடல் தனக்காகவே எழுதப்பட்டது போல். அவள் மனதில் விளைந்த ரணத்துக்கு மட்டும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

அன்றிரவு கோயம்புத்தூருக்குச் சென்று அவன் வீட்டில் தங்கியபோதும் அவன் இயல்பாகவே இருந்தான். அவளால் தான் முடியவில்லை. ப்ரகதீஷின் வீட்டில் அவர்களுக்கு ஒரு வரவேற்பு விழா மறுநாள் மாலை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வாசுவும், ரமணியும் உடன்வர தஞ்சாவூருக்குச் சென்ற போது நீலா அவர்களை ஆரத்தி சுற்றி வரவேற்றார். உள்ளூர் நண்பர்களும் சில முக்கியமான உறவினர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்த்த ஃபங்ஷன் விமரிசையாக நடந்தது.

எல்லாம் முடிந்து வாசுவும், ரமணியும் ஊருக்குக் கிளம்பியபோது வேதனையில் அவள் விழிக்குடம் ததும்பி, கண்ணீர்த் துளிகள் சிதறின. அவளைச் சமாதானப்படுத்திய அம்மா, மாப்பிள்ளையின் மனம் கோணாமல் நடந்து கொள்ளும்படி அறிவுரை கூறினார்.

இரண்டு நாட்களில் பரமசிவமும் நீலாவும் அவர்களை அழைத்துச் சென்று சென்னையில் குடித்தனம் வைத்தனர். அவளுக்கு அந்த இடம் பழகிய உடன் ஒரு வாரத்தில் அவர்களும் ஊருக்குக் கிளம்பியபோது அவர்களின் பிரிவு அவளை மேலும் தனிமைப்படுத்துவதாய்! சுந்தரி என்று ஒரு சமையல்காரம்மா இரு வேளையும் சமைக்க, அங்கு எல்லா வேலைகளுக்கும் ஆட்கள் இருந்தனர்.

அன்றிரவு அவளிடம் வந்த ப்ரகதீஷ், "இதுவரைக்கும் என் ரூமில நீ தரையில படுத்துட்டு இருந்தே... இனிமே உனக்கு அந்தக் கஷ்டம் வேண்டாம். அந்த கெஸ்ட் ரூமை நீ யூஸ் பண்ணிக்கலாம்.." என்றான் யாரிடமோ பேசுவது போல!

'இந்த வீட்டில் என்றைக்குமே நீ விருந்தாளிதான்... உரிமையான மனைவி இல்லை' என்று அவன் சொல்லாமல் சொல்கிறானோ என்று மனம் தவித்துப் போனது. தன் அறைக்குச் சென்ற ப்ரகதீஷுக்கோ உறக்கமே வரவில்லை.

இரவில் மெல்லிய விளக்கொளியில் அழகிய வரி வடிவமாகத் தெரியும் அவளை ரசித்தபடி தன்னையும் கட்டுப்படுத்திக் கொண்டு படுத்திருக்கும் தவிப்பிலிருந்து இனிமேல் விடுதலை என்ற நிம்மதியுடன் அவள் மேல் கோபமும் இணைந்து வந்தது.

ஒரு வீட்டிலே இருவரும் தனித்தனி தீவுகளாய்!

தான் அவளால் நிராகரிக்கப்பட்டோம் என்ற உண்மை, ...த வடுவாய்ப் பதிந்து வெறுப்பு அதிகமாகி அவன் ...வமே மாறிப் போயிருந்தது. இது எதையுமே அறியாத ...., அவன் மனம் மாறுவதற்காகக் காத்திருந்தாள்.



ஆனால் அவன் அவளுடன் பேசுவது கூட இல்லை. இறுகிய முகத்துடனும் குற்றம் சாட்டும் பார்வைகளுடனுமே இருந்தவன், பேசினாலும் வார்த்தைகள் தீப்பிடித்தன! அவளுக்கும் பழகி விட்டது... ஆனால் இருவரும் ஒருவருக்கொருவர் உயிராய் விரும்புவது மட்டும் மறைந்து போனது.

பொழுது போகாமல் ஒரு வேலையுமின்றி சோம்பேறியாகி விடுவோமோ என்று தோன்ற வீட்டை அலங்கரிப்பதில் ஈடுபட்டாலும் அதுவும் ஒரு வாரத்திலேயே முடிந்துவிட, மனம் செக்கு மாடாய் அவனையே சுற்றி வருவதாய்!

இன்றுடன் அவர்களுக்குத் திருமணமாகி ஒரு மாதமாகிறது. ஊரிலிருந்து வரப் போவதாக அன்று விஜய் ஃபோன் செய்திருந்தான். இரவுச் சாப்பாட்டுக்கு ஸ்பெஷலாக தயார் செய்யும்படி கூறிவிட்டு அவனுக்காகக் காத்திருந்தாள் ஸ்ருதி. ப்ரகதீஷ் எப்போதுமே இரவு தாமதமாகத்தான் வருவான். அழைப்பு மணி ஒலித்ததும், விஜய்தான் என்று ஆர்வமாகச் சென்று, 'விஜய்!' என்றபடி கதவைத் திறந்தால், அங்கு ப்ரகதீஷ் நின்று கொண்டிருந்தான்.

அவனைக் கண்டவுடன் திகைத்து விழித்துவிட்டு, அமைதியாகப் பின்னடைந்தவளை அவன் பார்வை கோபத்துடன் கூறு போடுவதாய்! ஓரக் கண்ணால் அவளையே பார்த்துக் கொண்டே வேகமாக தன் அறைக்குள் சென்று விட்டான் அவன்.

மனம், எரிதழலாய்! தன்னை ஒரு நாள் கூட அவள் இப்படி ஆவலுடன் வரவேற்றதில்லை என்ற நெருடல் மனதில் ஆழமாய்! முகம் கழுவி விட்டு கட்டிலில் சாய்ந்து ஒரு புத்தகத்தை எடுத்து அதில் மனதைச் செலுத்தியபோது

மெதுவாக கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்த ஸ்ருதியின் கையில் டிபன் இருந்தது.

அழைப்பு மணி ஓசை கேட்டதும் அவசரமாக அவனிடம் தட்டைக் கொடுத்தவள் வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள். விஜயைக் கண்டவுடன் மனம் மிகவும் குதூகல மானது. தன் பக்கத்து மனிதர்களில் ஒருவனைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்து பிரகாசித்தது.

அவளையே நோக்கியபடி வந்த ப்ரகதீஷை ஆவலுடன் அணைத்துக் கொண்டான் விஜய். "எப்படிடா இருக்கே? என் வாயாடி அத்தை பொண்ணு கிட்டே வசமா மாட்டிக்கிட்டியா? லைஃப் இப்ப எப்படி இருக்கு...?" கிண்டலாக ஒலித்தது அவன் குரல்.

"விஜய்! உதை வாங்கப் போறே.. ஜனனிக்காக பாக்கறேன். இல்லைன்னா அவ்வளவுதான்.." என்றபடி சுட்டு விரலைக் காட்டி அவள் எச்சரித்தபோது விஜயுடன் அவள் பேசும் விதத்தைக் கவனித்த ப்ரகதீஷின் முகம் இறுகியது.

"சரி.. முதல்லே அத்தையும் மாமாவும் எப்படி இருக்காங்கன்னு சொல்லு... ஜனனிக்கு ஏதாவது விசேஷமா?" ஆர்வத்துடன் பரபரத்தான் அவன்.

"எல்லாரும் நல்லாருக்காங்க! என் கதை இருக்கட்டும். இங்கே நீங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கீங்க? அதைச் சொல்லு முதல்லே! நீயும் ஜனனி மாதிரி இவனை முந்தானையில முடிஞ்சாச்சா... இல்லை, இன்னும் ஐயாவோட அரசாட்சிதானா?

உடனே முகம் சிவக்க, "அப்படின்னா...? போடா! புரியற மாதிரி பேசு" என்றாள் ஸ்ருதி சிணுங்கலாக.



"ஏய்... நடிக்காதே! ப்ரகதீஷ்... கல்யாணம் ஆனாலே பெண்களுக்கு சுதந்திரம் போயிடுங்கறதெல்லாம் சும்மா தெரியுமா? நம்ம சுதந்திரம்தான் போயிடுது. ராத்திரி ஏன் சீக்கிரம் வரலை...? எங்கே போனீங்க..? ஏன் சீக்கிரம் சாப்பிட லைன்னு ஆயிரம் கேள்வி... ப்ச்.. சமாளிக்க முடியலை.." போலியாகப் பெருமூச்சு விட்டபடி கூறினான் விஜய்.

"எனக்கு அந்தக் கஷ்டமெல்லாம் இல்லை. நைட் எல்லா வேலைகளையும் முடிச்சிட்டு, முன்னாடி மாதிரியே எட்டு மணிக்குத்தான் நான் வரேன்" என்றான் ப்ரகதீஷ் விட்டேத்தியாக.

"அப்படியா? நம்பவே முடியலையே... ஸ்ருதி எப்பவுமே ஜாலி டைப்பாச்சே! வெளியே போறது... ஷாப்பிங் பண்றதெல்லாம் ரொம்பப் பிடிக்கும்! அதுவும் பீச்சுக்குப் போக ரொம்ப ஆசைப்படுவா! அவளையே மாத்திட்டியா என்ன?"

"தெரியலையே! அதை நீ அவகிட்டதான் கேக்கணும்" என்று ப்ரகதீஷ் கூறும்போது ஒரு தர்மசங்கடமான மௌனத்திலிருந்தாள் அவள். அவளுக்கு முன்பு சொடக்குப் போட்ட விஜய், "என்னாச்சு ஸ்ருதி? படபடன்னு பேசுவே? அமைதியா இருக்கே... என்னால நம்பவே முடியலை. இது எங்க ஸ்ருதிதானான்னு!" என்றபோது ஆச்சர்யம் தொனித்தது அவன் குரலில்.

அதன் பிறகு பேச்சு பொதுவான விஷயங்களில் செல்ல, விஜய் சாப்பிட்டு விட்டு ஊருக்குக் கிளம்பிச் சென்ற பிறகு மீண்டும் அவன் தொட்டாற் சிணுங்கியாய் தன் அறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டான்.

மறுநாள் காலையில் தோட்டத்தில் அமர்ந்திருந்த ஸ்ருதி ஏதோ யோசனையிலிருந்தாள். என்றாவது இருவருக்கும்

இடையிலிருக்கும் கோபப் பாதையைக் கடந்து அவன் இதயத்தில் தான் தடம் பதிக்க முடியுமா என்று அவன் மனம் ஏங்கியது. மாயாவின் நினைவு நெஞ்சினுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

திடீரென்று யாரோ வேகமாக அவளைப் பற்றித் திருப்பவும் பதறிப் போய் திரும்பியபோது அங்கு ப்ரகதீஷ்தான் கண்களில் கடும் சீற்றத்துடன் நின்று கொண்டிருந்தான். "என்... மகாராணிக்கு வீட்டு ஞாபகமே கிடையாதா? புருஷன்னு ஒருத்தன் இருக்கறதே உன் வீட்டு மனுஷங்க வந்தாத்தான் நினைப்பு வருமா?" என்றான் எகத்தாளமாக.

"ஸாரி.. உங்களுக்கு ஏதும் வேணுமா என்னவோ மனசே சரியில்லை.. அதான்!"

"ஓ.. உன் காதலனோட நினைப்பா? அவன்தான் வேற ஒரு பொண்ணை விரும்பறதா நீ சொன்னியே... ஏன் தேவை இல்லாம பாவம் அவனையே நினைச்சிட்டு இருக்கே?" குத்தலாகக் கூறியவனிடம், 'அப்படி எனக்கு வேறு யாருமில்லை' என்று மறுக்கவும் முடியாமல், 'என் மனம் கவர்ந்தவன் நீதான்' என்று ஒத்துக் கொள்ளவும் முடியாமல் தொய்ந்து போனாள் அவள்.

மெதுவாக எழுந்து செல்பவளையே பார்த்துக் கொண்டிருந்த ப்ரகதீஷுக்கு தன் மேலேயே கோபம் வருவதாய்! அவளுடைய கொலுசுகளின் கீர்த்தனை இன்று சோகமாய்! அந்த நிமிடம், தன்னைப் பற்றியே நினைத்து அவளை ஏங்கித் தவிக்கச் செய்ய வேண்டும் என்ற வேகம் அவனுள் எழுந்தது.

ஶ்ருதியின் மனதிலோ தன் மனதில் பூத்த காதல் அவன் மனதிலும் மலர்ந்து மணம் பரப்புமா என்ற எதிர்பார்ப்பு ஏனோ



இன்று அதிகமாய்! உள்ளே சென்றவள் அவனுக்காக எல்லாவற்றையும் மேசையில் எடுத்து வைத்துவிட்டு மௌனமாய்க் காத்திருந்தாள். இப்படிக் காத்திருப்பதிலேயே தன் வாழ்க்கை கழிந்து விடுமோ என்றும் விரக்தி வந்தது.

## 6

*உன் கோபத்தை...*
*ஊடலை...*
*தன் ஓசையிலேயே...*
*எனக்கு அறிமுகப்படுத்தும்*
*மௌனப் போர் முரசாய்...!*

மறுநாள் மாலை அதிசயமாக ப்ரகதீஷ் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்துவிட்டான். ஶ்ருதிக்கே ஆச்சரியமாக இருந்தது. அவனிடம், "காபி வேணுமா?" என்றாள் புன்னகையுடன்.

ஏதோ யோசனையுடன் அவளையே பார்த்தவன், "வேணும்! அப்புறம் ஒரு நிமிஷம்... இன்னிக்கு பீச்சுக்குப் போலாமா? அப்படியே வேணா வெளியில சாப்பிட்டுட்டு வந்துடலாம்" என்றான்.

உடனே இறுக்கம் தளர்ந்து சந்தோஷத்துடன் முறுவலித்தவள், "ம்... போகலாம்! நான் ரெடியாயிடறேன்.." என்று வேகமாக உள்ளே சென்று, "சுந்தரிம்மா... காபி மட்டும் போதும்! நாங்க வெளியே போறோம். நைட்டுக்கு எதுவும் செய்ய வேணாம்" என்றாள்.

காபியை அவனிடம் கொடுத்துவிட்டு, தயாராகி வந்தபோது ப்ரகதீஷ் அவளுக்காக காத்திருந்தான். இருவரும் காரில் கடற்கரைக்குச் சென்றபோது அலைகள் நுரையால்

கோலம் போட்டுக் கொண்டிருந்தன. அந்தி வானம் சிவந்து போய் அழகாய்த் தெரிந்தது. அலைகள் காலில் உரச, தண்ணீரில் நிற்பது அலாதியான சுகமென்று தோன்றியது.

வெகு நேரம் கழித்து மணலில் வந்து அமர்ந்தபோது இருவருக்கிடையே மௌனமே பேச்சுவார்த்தையாய்! ஓரக்கண் பார்வைகளே பாலமாய்! திடீரென்று "ஸ்ருதி..." என்ற உற்சாகக் குரல் பெரிதாய் கேட்டதும், கேள்வியுடன் நிமிர்ந்தாள். அவள் அப்பாவுடைய நண்பரின் மகன் விஷால் வந்து கொண்டிருந்தான்.

"ஸ்ருதி! நீ இங்கயா இருக்கே? என்னை மறந்திட்டே இல்லை? ஒரு ஆறு மாசம் ஸ்டேட்ஸ் போயிட்டு வரதுக்குள்ளே, கல்யாணமே முடிஞ்சு செட்டிலாயாச்சு போலருக்கு.. கங்கிராட்ஸ்" என்றவன் ப்ரகதீஷிடம் திரும்பினான்.

"ஹலோ சார்! நான் விஷால்.. ஸ்ருதியோட ஃப்ரெண்ட். நேத்துதான் அமெரிக்காவிலேருந்து வந்தேன்... நாளைக்கு எங்க ஊருக்கு கிளம்பறேன். ஹேப்பி மேரீட் லைஃப்" என்று வாழ்த்தி விட்டு வெகு நேரம் ஸ்ருதியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

விழிகள் மின்ன அவனுடன் சகஜமாகப் பேசிச் சிரிக்கும் தன் மனைவியைப் பார்த்தபோது அவன் மனதுக்குள் வன்மம் எட்டிப் பார்த்தது. இருவரும் உற்சாகத்துடன் பேச, ப்ரகதீஷ் எதிர்பார்த்து வந்த தனிமை மட்டும் கடைசி வரை அவனுக்குக் கிடைக்கவே இல்லை.

பிறகு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தபோது ஸ்ருதியின் பின்னாலேயே அவளுடைய அறைக்கு வந்தான் ப்ரகதீஷ். அங்கு அவனை எதிர்பார்க்காததால் வியப்புடன்



அவள் திரும்பியபோது, ஏளனமாக சுழித்த உதடுகளுடன், "இந்த விஷால்தான் உன்னோட லவர் பாயா? நல்லாத்தான் இருக்கான்.. பேசாம அவன் அமெரிக்காலேருந்து வந்த பிறகு அவனையே கல்யாணம் செஞ்சிருந்திருக்கலாம்னு தோணுது இல்லை?" என்று கேட்டான் ஒரு மாதிரி குரலில்.

"இல்லை.. அவன் என்னோட லவர் இல்லை.."

"இதை என்னை நம்பச் சொல்றியா? அவனைப் பார்த்ததுமே உன் முகத்துல தெரிஞ்ச சந்தோஷமும், பேச்சும் எனக்கு எல்லா உண்மையையும் புரிய வச்சிடுச்சி!"

இவனிடம் என்ன சொல்லித் தன்னைப் புரிய வைப்பது என்ற தவிப்புடன், "நீங்க என்ன நினைச்சாலும் உண்மை என்னன்னா, விஷால் எனக்கு நல்ல ஃப்ரெண்ட் மட்டும்தான்" என்றாள் அழுத்தமாக.

அவளைக் கோபத்துடன் வேகமாக இழுத்துத் திருப்பியவன், "அப்ப அவன் யாருன்னு சொல்லு.. உன் லவர் பேரென்ன? எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்.." என்று உறுமினான். தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடியவள், அவனுடைய கடைசிக் கேள்வியில் கல்லாய்ச் சமைந்தாள்.

'அவன் பெயரையே அவனிடம் எப்படிச் சொல்வது? இப்போது சொன்னாலும் நம்புவானா?' என்ற தவிப்புடன் நிமிர்ந்தபோது அவளுடைய இதழ்கள் அவனால் வலிமையுடன் சிறைப்படுத்தப்பட்டன.

உடனே அவளைத் தள்ளி நிறுத்தியவன், "என்ன பொய் சொல்லி இவனை ஏமாத்தலாம்னு யோசிக்கிறே இல்லை? இனிமேலயும் ஏமாற நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. பொண்ணுங்க எல்லாமே மாயக்காரிங்கதான். விரும்புன

வனை ஏமாத்தறதிலே!'' என்று அடிக்குரலில் சீறியவன், அவளை முரட்டுத்தனமாக இழுத்து அணைத்தபோது வெடவெடத்துப் போய் நடுங்கத் தொடங்கினாள் ஸ்ருதி.

''ப்ளீஸ்...'' என்று இறைஞ்சிய அவள் கெஞ்சலுக்கும் மறுப்புகளுக்கும் மதிப்பின்றி, இனிமையாக நடந்திருக்க வேண்டிய ஒரு மென்மையான இல்லறம் சூறாவளியாய் சுழன்று அவளைச் சேதப்படுத்தியது. அதன் காயங்கள் மட்டும் அவள் உள்ளத்தில் ஆழமாய்!

புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது. அதைவிட அவன் அந்த அறையை விட்டுச் செல்லும் போது கூறிய வார்த்தைகள், தீயாய் பரவித் தகித்தது. அவளைத் திரும்பியும் பார்க்காமல் பார்வையை எங்கோ பதித்து, ''ஸாரி! நீயா.. நான் மாயான்னு நினைச்சிட்டேன்...!'' உணர்ச்சிகளற்ற முகத்துடன் கூறிவிட்டு அவன் வெளியே சென்ற போது, கூசிப் போனாள் ஸ்ருதி.

தனக்குள்ளே ஏதோ ஒன்று மெதுவாக உடைவதும், உணர்வுகள் மரணிப்பதும் அவளுக்குப் புரிந்தது. புழுவாகத் துடித்து துவண்டு போய் கண்ணீரில் கரைந்தாள். சிறு முயல் குட்டியாய் அவனையே சுற்றி வந்த நினைவுகளும் இன்று தன் உணர்வுகளுக்கு அவனால் உடல் நலமின்றிப் போனதும் மறவாமல் நினைவு வந்து மனதை வலிக்கச் செய்தது.

அன்றிலிருந்து ப்ரகதீஷும் தன் தவறை உணர்ந்தாற் போல அவளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் ஒதுக்கமாகவே இருந்தான். ஒரு கடமை என்பது போல் அவனுக்கு வேண்டியவைகளை மௌனமாய் செய்து கொண்டிருந்தவள் அன்று முதல், இரவில் தன் அறையைத் தாளிட மட்டும் மறப்பதில்லை.



இப்படியே விலகலும் ஒதுங்கலுமாய் சென்ற ஒரு மாதத்துக்குப் பிறகு, ஒருநாள் காலையில் எழுந்து நிற்கும்போதே ஸ்ருதிக்கு தலைசுற்றியது. 'ஏன் இப்படி மயக்கம் வருவது போலிருக்கிறது?' என்று நினைத்தபோது ஒரு மாதமாக சரியாகச் சாப்பிடாமல் உடலை வருத்திக் கொண்டதால் வந்த விளைவென்று தோன்றியது.

அன்று சமையலுக்கு உதவி செய்ய காய் நறுக்கிக் கொண்டிருந்த சுந்தரியிடம், ''இன்னிக்குக் காலையிலே இருந்தே தலை சுத்துற மாதிரி இருக்கு சுந்தரிம்மா... சாப்பிடவே முடியலை.. என்னன்னே தெரியலை'' என்றாள் சோர்வாக.

அவர் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு வேகமாக அவளிடம் வந்தார். முகம் கொள்ளாத மகிழ்ச்சியுடன், ''நாள் தள்ளிப் போயிருக்காம்மா?'' என்ற போது, ''என்ன சுந்தரிம்மா சொல்றீங்க.. புரியலையே?..'' என்றாள்.

''பெரியவங்க இருந்தா, சரியா கண்டுபிடிச்சிருப்பாங்க!'' அவள் காதருகில் குனிந்து தன் சந்தேகத்தை அவர் கேட்டபோது அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. தன் சிந்தனைகளிலேயே உழன்று கொண்டிருந்தவளுக்கு அந்த முக்கியமான விஷயம் மறந்து போயிருக்கிறது.

உடனே இது சாத்தியம் தானா என்ற சந்தேகம் மனதில் வர, அனைத்தையும் மீறி மனதில் எல்லையில்லாத மகிழ்ச்சி வந்து முகாமிட்டது. 'இந்த வீட்டில் எனக்கும் துணையாக ஒரு ஜீவன் வரப் போகிறதா' என்ற பிரமிப்பு, சிலிர்ப்பூட்டுவதாய்!

''ஐயா வந்தவுடனே சொல்லி, டாக்டர் கிட்டப் போய் காட்டுங்கம்மா..'' என்றும் கூறிவிட்டு அவர் சமையலைக்

கவனிக்க, இந்த விஷயத்தை அவனிடம் எப்படிச் சொல்வது என்ற தயக்கம், மனதில் நெருடலாய்! அவன் ப்ரகதீஷின் முகத்தைப் பார்த்தே வெகுநாட்களாகிறது.

இந்த விஷயத்தைக் கேட்டதும் அவனுடைய மனம் எப்படி மாறுமோ என்ற பயமும் வந்தது. உடனே தன் அம்மாவிடம் கூற வேண்டும் போல்! அவருக்கு ஃபோன் செய்தபோது அம்மாவின் குரல் கேட்டதுமே ஏனோ கண்களில் நீர் கோர்த்தது.

''அம்மா! எப்படிம்மா இருக்கே?'' என்றவுடன், ''நான் நல்லா இருக்கேன்டா.. நீயும் மாப்பிள்ளையும் நல்லா இருக்கீங்களா?'' ஆவலுடன் கேட்டார் அவர்.

''ம்.. நல்லா இருக்கேம்மா... இந்த மாசம் நாப்பத்தஞ்சு நாள் ஆகியிருக்கும்மா... நான் முதல்லே கவனிக்கலே.. இன்னிக்கு காலையில எழுந்திருக்கும்போது, ரொம்ப கஷ்டமா இருந்ததும்மா, சுந்தரிம்மாதான் இந்த மாதிரி சொன்னாங்க..'' என்றபோது மிகவும் மகிழ்ந்து போனார் ரமணி.

''ஸ்ருதிம்மா! நான் பாட்டியாயிட்டேனா? நீ ரொம்ப கவனமா இருக்கணும். அப்பாட்ட உடனே சொல்றேன். நாங்க கிளம்பி வரோம். 'மாப்பிள்ளையை விசாரிச்சதா சொல்லு. அப்புறம் சம்பந்தி கிட்டயும் சொல்லிடு'' என்றவள் ஆயிரம் அறிவுரைகளைக் கூறிய பிறகே ஃபோனை வைத்தாள்.

அவள் மனம் மகிழ்ச்சிக் கடலில்! தனக்குள்ளும் இன்னொரு உயிரின் சுவாசம் கேட்கப் போகிறதா என்ற பரவசம் வானையும் வசப்படுத்துவதாய்! ப்ரகதீஷிடம் சொல்வதா வேண்டாமா என்று தவித்தபோது அவன் இதை எப்படி ஏற்றுக் கொள்வானோ என்ற பயமும் உள்ளூரக்



கிளர்ந்தது. தயக்கமெனும் பனிப் போர்வைக்குள் மனம் தத்தளிப்பதாய்!

அன்றிரவு விஷயமறிந்த வாசுதேவன் மகிழ்ச்சியுடன் அவளிடம் பேசிவிட்டு, மறுநாள் கோவை எக்ஸ்பிரஸில் கிளம்பி வருவதாகக் கூறினார். அவர்களிருவரும் வந்தவுடன் அவனிடம் சொல்லலாம் என்ற எண்ணத்துடன் உறங்கியவளுக்கு உலகத்தையே தன் கைகளுக்குள் அடக்கினாற் போன்ற ஒரு குதூகலத்துடன் மறுநாள் பொழுது விடிந்தது.

காலையிலிருந்தே ஒரு துள்ளலுடன், இதழில் நிறைந்த மென்னகையுடன் உலவிக் கொண்டிருந்தவளைக் கண்ட போது ப்ரகதீஷின் விழிகள் ஆராய்ச்சியுடன் அவளையே அளவிட்டது. அவனுக்கு டிபன் பரிமாறும் போது, ''இன்னிக்கு நைட் அப்பாவும், அம்மாவும் கோவை எக்ஸ்பிரஸ்ல வராங்க'' என்றாள் ஸ்ருதி மெலிந்த குரலில்.

''ம்.. நான் நேரா ஸ்டேஷனுக்குப் போய் அவங்களை அழைச்சிட்டு வந்துடறேன்'' என்றவுடன், ''தேங்க்ஸ்!'' என்றாள். ஒரு கணம் அவளையே யோசனையோடு அளவிட்டவன், ''அவங்க என்ன பாவம் செஞ்சாங்க? அவங்க ரெண்டு பேரையும் எனக்கும் பிடிக்கும்'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

'உன்னை விரும்பியதைத் தவிர நான் மட்டும் வேறு என்ன பாவம் செய்தேன்?' என்று அவனிடம் கேட்க வேண்டும் போல்! ஆனால் உள்ளத்தில் எழுந்த கேள்வி உதட்டிலேயே உறைந்தது. இரவு ஊரிலிருந்து அம்மா, அப்பா வருவதை சுந்தரிம்மாவிடம் கூறியபோது, ஸ்பெஷலாக டிபன் வகைகளைச் செய்து வைத்து அசத்தி இருந்தார். அவளை இப்போதெல்லாம் அவர் எந்த வேலையும் செய்ய

விடுவதில்லை.

அப்பா அம்மா வரப் போவதை எதிர்பார்த்துக் காத்திருந்த போது இன்றிரவு கட்டாயம் மாமனார், மாமியாரிடம் ஃபோனில் கூறிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டவள், ப்ரகதீஷுடன் வந்த அம்மாவைக் கண்டதும் ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள்.

ரமணி, ''மெல்லடா.. முன்னாடி மாதிரி இப்படி எல்லாம் ஓடி வரக் கூடாது. மெதுவா நடக்கணும். முதல்லே, டாக்டர் கிட்டே அழைச்சிட்டுப் போய் உனக்கு எல்லாத்தையும் அவரை விட்டே சொல்லச் சொல்லணும். அப்பத்தான் கேப்பே போலிருக்கு'' என்றபடி முத்தமிட்டார்.

''கங்கிராட்ஸ் மாப்பிள்ளை! நீங்களா சொல்லுவீங்கன்னு பாத்தோம். ஆன ஸ்ருதியே சொல்லட்டும்னு நீங்க விரும்பறது எனக்குப் புரியுது... ரொம்ப சந்தோஷம்!'' என்று வாசு கை குலுக்கியபோது அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

## 7

*ஒரு சிற்றோடையின்*
*சலசலப்பாய்...*
*சிறகாய்... சிலிர்ப்பாய்...*
*எனக்குள் ஒலி எழுப்பும்*
*சங்கீத சப்தஸ்வரமாய்...!*

ப்ரகதீஷின் விழிகள் மின்னலென உயர்ந்து ஸ்ருதியை நோக்கியது. தன் அம்மாவின் தோளில் அவள் வெட்கத்துடன் சாய்ந்திருக்கும் நிலையே, அவனுக்கு உண்மையைப் புரிய வைத்தது.



மனதில் எதுவோ அடைப்பது போல், சுகமான சுமையாய் ஒரு உணர்வு! ஒரு நீண்ட பெருமூச்சு வேகமாக வெளிப்பட, பிரமிப்பாக இருந்தது. தனக்குள் சிறிது நாட்களாக உறங்கி இருந்த காதல் மனமும் மென்மையான நேசமும் விழித்தெழுவது அவனுக்குப் புரிந்தது. இது நிஜமா என்ற தவிப்புடன், கண்கள் அவளை ஏறிட்டது.

அவள் அம்மாவின் அன்பில் நெகிழ்ந்து போயிருந்ததால், அவனிடம் திரும்பவே இல்லை. அவள் எப்படி எல்லாம் தன் மனதை சேதப்படுத்துகிறாள் என்பதை என்றாவது உணர்வாளா என்று முதன் முறையாக ஏங்கியது அவன் மனது.

''ஸ்ருதி..!'' அவனுடைய மெல்லிய அழைப்பு எங்கோ கனவில் கேட்பதுபோல் தோன்ற நிமிர்ந்தால், அவளைத் தன்னுடன் வரும்படி சைகை செய்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றான் ப்ரகதீஷ்.

மெதுவாக அவனைப் பின்தொடர்ந்த போதே, மனதில் ஒரு பயம் வந்தது. உள்ளே சென்றதும் வேகமாக அவளிடம் திரும்பியவன், ''எனக்குக் குழந்தை பிறக்கப் போற விஷயத்தை, நான் மத்தவங்க சொல்லித் தெரிஞ்சிக்க வேண்டியிருக்கு.. ஊருக்குப் போன் பண்ணி சொல்லத் தெரிஞ்ச உனக்கு, இதே வீட்டில இருக்கற எனக்கு சொல்ல முடியலை... இல்லை?'' என்றவனின் குரல் விரக்தியாய்!

''இல்லை.. எனக்குப் பயமா இருந்தது! விஷயத்தைச் சொன்னா, நீங்க.. குழந்தையைக் கலைச்சிட சொல்வீங்களோன்னு..!'' தயக்கத்துடன் நிறுத்தினாள்.

ஒரு கோபமூச்சுடன் நிமிர்ந்தவன், ''என்னை என்ன அவ்வளவு கேவலமானவனா நினைச்சிட்டியா? என்

குழந்தையையே கலைக்கச் சொல்ற அளவுக்கு நான் ஒன்னும் கொடூரமானவன் இல்லை!'' என்றான்.

உடனே, தன்னுடைய முரட்டுத்தனமும், பேச்சும், அவளுக்குள் தன்னைப் பற்றி மோசமான கருத்தை விதைத் திருப்பது புரிவதாய்! முகம் வேதனையில் சுருங்கிவிட, தன் செய்கைகளுக்குத் தானே வருந்துபவன் போலக் கண்களை இறுக மூடித் திறந்தவன், ''சரி! நீ போய் அவங்களைக் கவனி போ..'' என்றான் இறங்கிய குரலில்.

தன் மீது உள்ள வெறுப்பை அவள் குழந்தையிடம் காட்டவில்லை என்ற உண்மை நிம்மதியைத் தருவதாய்! தன் மனம், அவள் மேல் கொண்ட காதலை மீண்டும் புதுப்பிப்பதும் புரிவதாய்! ஜனன மரண நிகழ்வுகள் போல், காதலும் வாழ்வில் ஒரு முறைதான் வருமென்று தோன்றியது.

அவன் உடைமாற்றிக் கொண்டு வெளியே வந்தபோது, வாக அவனுக்காகக் காத்திருந்தார். உடனே தஞ்சாவூருக்குப் ஃபோன் செய்து விஷயத்தைக் கூறியபோது இருவருமே மிகவும் மகிழ்ந்தனர். முதலில் சம்பந்தியிடம் பேசிவிட்டு பிறகு ஸ்ருதியிடம் பேச வேண்டும் என்றனர்.

அவள் பேசியபோது, ''ஸ்ருதி... ரொம்ப சந்தோஷம்மா... இந்த செய்திக்காகத்தான் நாங்க காத்துக்கிட்டு இருந்தோம்... ஜாக்ரதையா இரும்மா... நாங்க, இன்னும் ஒரு பத்து நாள் ழிச்சி அங்க வரோம்..'' என்றார் நீலா.

வெட்கத்தில் முகம் சிவந்துவிட, ''சரி அத்தை'' என்று றிவிட்டு நிமிர்ந்தபோது, அவன் பார்வை மட்டும் அவள் ன்னச் சிவப்பிலேயே!



சாப்பிட்டு முடித்து படுக்கச் சென்றபோது தன்னுடன் அவளும் வரவும், ஒரு பாயை விரித்துத் தரையிலேயே படுத்துக் கொண்டான் அவன். அன்றிரவு இருவருமே உறங்க வெகு நேரம் ஆனது.

மறுநாள் காலையில் ஆபீஸுக்குக் கிளம்பியவன், வாசுதேவனிடம் ''மாமா! நான் போய் இறங்கிட்டு காரை அனுப்பறேன். என் ஃப்ரெண்டோட அம்மா கற்பகம் ஃபேமஸ் டாக்டர். டிரைவருக்கு அவங்க ஹாஸ்பிடல் நல்லாத் தெரியும். நான் ஃபோன்லே எல்லாம் பேசிட்டேன். பதினோரு மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட்... ஸ்ருதிய அழைச்சிட்டுப் போயிடுங்க... எல்லா டெஸ்டும் பண்ணிடுவாங்க..'' என்றான்.

''சரி மாப்பிள்ளை! நீங்க வரலீங்களா?'' என்று அவர் கேட்டபோது ''இன்னிக்கு முக்கியமான மீட்டிங் ஒண்ணு இருக்கு. நான் கட்டாயம் போகணும்.. அதான் நீங்களும் அத்தையும் இருக்கீங்களே?'' என்றான்.

ஸ்ருதியின் முகம் அதைக் கேட்டு சுருங்கியது. அவன் அவளை எப்படி நடத்தினாலும், தவறே செய்திருந்தாலும், இப்போது மனம் அவன் அருகாமையை மிகவும் விரும்பியது. ஏனோ அவன் தன் அருகிலேயே இருக்க வேண்டும் போல்!

டாக்டரிடம் சென்றபோது, அவர் அவளைப் பரிசோதித்து விட்டு கர்ப்பத்தை உறுதி செய்தார். உடல் பலவீனமாக இருப்பதால், மாத்திரைகளை எழுதிக் கொடுத்துவிட்டு, ப்ரகதீஷை நலம் விசாரித்தார். இந்த நேரத்தில் எப்படி இருக்க வேண்டும் என்றும் அறிவுரை கூறினார்.

அன்றிரவு, வாசுதேவன் அவனுடன் வந்து படுத்துக் கொண்டபோது, தான் தரையில் படுப்பதை அவள் விரும்ப

வில்லை என்பது புரிய, குழந்தை வந்தவுடன் தன் மேலும் அக்கறை வருகிறதோ என்று தோன்றியது அவளுக்கு!

காலையில் எழுந்திருந்ததிலிருந்து, தலைசுற்றலும், மயக்கமும் அவளைப் பாடாய்ப் படுத்தியது. தாய்மையின் அருமையும், சகிப்புத் தன்மையும் புரிந்தது. ரமணி அவளை கவனமாகப் பார்த்துக் கொண்டார். அவளுக்குப் பிடித்த மாதிரி சமைத்து, பாசத்துடன் கவனித்தார், ஒரு வாரம் இப்படியே சென்றது.

அவனால், இப்போதெல்லாம் அவளைப் பார்க்கவே முடிவதில்லை. காலையிலும் அவன் கிளம்பும் வரை, அவள் வெளியில் வருவதே இல்லை. இரவும் அவளைத் தொந்தரவு செய்ய அவனுக்கு மனம் வராது. அன்றும் அவன் வீட்டுக்கு வரும்போதே எட்டு மணியாகி இருந்தது.

வாசலில், வாசதேவன் அவனுக்காகக் காத்திருந்தார். உள்ளே வந்ததும், அவன் விழிகள் அலைபாய்ந்தன. இப்போது அவள் மீது நேசம் அதிகமாகி, பழைய கோபம், வன்மம் எல்லாம் தொலைந்து போயிருந்தது. மெலிதான கொலுசின் ஓசை, மீண்டும் அவன் இதயத்தை வருட ஆரம்பித்திருந்தது.

''மாப்பிள்ளை.. இன்னிக்கு பௌர்ணமி! ஸ்ருதி நிலா சோறு சாப்பிடணும்னு ரொம்ப ஆசைப்பட்டா... எல்லாம் ரெடியா இருக்கு... அவங்க மாடியில உங்களுக்காகத்தான் வெயிட் பண்றாங்க... நீங்க வாங்க சாப்பிடலாம்'' என்றார்.

''நான் பத்து நிமிஷத்துல வரேன் மாமா.. நீங்க போங்க..'' என்று தன் அறைக்குள் சென்று குளித்துவிட்டு மாடிக்கு வந்தான் ப்ரகதீஷ். மொட்டை மாடியில் பெரிய ஜமக்



காளத்தை விரித்து அவளுடைய அம்மாவின் மடியில் சாய்ந்து சலுகையுடன் கண் மூடி இருந்தாள் ஸ்ருதி.

''வாங்க மாப்பிள்ளை!'' என்ற அம்மாவின் குரலில் அவள் வேகமாக எழுந்தபோது, ''ஷ்.. மெதுவா..'' என்று அவன் குரல் படபடத்தாலும் அவன் பார்வை மென்மையாய்! காதலின் நுழைவாயிலாய் அவள் கண்கள் விரிந்து படர்ந்தது. ஆனால், தன் குழந்தைக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்றே அவன் பயப்படுகிறானோ என்ற எண்ணமே, அவளிடம் ஒரு பெருமூச்சை வரவழைப்பதாய்!

வானப் பெண்ணின் தங்கப் பொட்டாய், நிலவு வானில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தச் சூழலே மிக இனிமையாய்! அனைவருக்கும், தங்களின் சிறு வயது ஞாபகப் பதிவுகள் நினைவில் வந்து, மனதை நெகிழச் செய்திருந்தது. கலந்த சாதங்களை தட்டில் வைத்துப் பரிமாறிய ரமணி, அதை இருவரிடமும் கொடுத்துவிட்டு, ஸ்ருதிக்கு மட்டும் உருண்டை பிடித்துக் கையில் எடுத்தார்.

அதை ஆவலுடன் ரசித்தபடி சாப்பிட்ட ஸ்ருதிக்கு, தான் இன்று நிறையவே சாப்பிட்டது புரிந்தது. அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ப்ரகதீக்கோ, அவள் இதுபோல் தன்னிடம் என்றாவது மனம் ஒன்றிப் பழகுவாளா என்ற ஏக்கம், விரவிப் பரவியது.

நாளை இரவு, அவர்கள் ஊருக்குக் கிளம்புகிறார்கள். மறுவாரம் அவனுடைய அப்பாவும் அம்மாவும் வருகின்றனர். அதுவரை, தான் அவளை ஒரு பூவைப் போல தாங்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் நிலை பெற்றது. அவள் தன்னை விரும்பவில்லை என்று தெரிந்த பிறகு தீயாய்

தவித்த மனது. இப்போது தன் குழந்தையை அவள் சுமக்கிறாள் என்றதுமே பனியாய் உருகிக் குளிர்ந்தது.

வாசுதேவனும், ரமணியும் ஊருக்குக் கிளம்பிய பிறகு, அன்று தனியாகப் படுத்திருந்தவனுக்கு, ஸ்ருதி தனியாக இருக்கிறாளே.. ஏதும் பிரச்சினை என்றால் என்ன செய்வாள் என்று தோன்ற, பதட்டத்துடன் அவள் அறைக்குச் சென்றான்.

கதவுக்குக் கீழே வெளிச்சம் தெரியாததால், அவளைத் தொந்தரவு செய்ய மனமின்றித் திரும்பிய போது, அந்த அறைக் கதவும் அவளுடைய இதயம் போலவே அழுந்த மூடியிருப்பது கண்டு உள்ளம் வலித்தது. மறுநாள், அவன் தயாராகி வந்தும் அவளைக் காணவில்லை.

ப்ரகதீஷ் மெதுவாக அவளுடைய அறைக் கதவைத் தட்டி விட்டுக் காத்திருந்தபோதும் பதில் வராமல் போகவே பதறிப் போய்க் கதவைத் திறந்தபோது, அறையில் அவள் இல்லை. 'அம்மா' என்ற மெல்லிய ஓசை ஒன்று குளியலறையிலிருந்து வர, வேகமாக அங்கு சென்றான்.

கதவு திறந்திருக்க, வாஷ்பேசினில் சாய்ந்து நின்றிருந்தாள் அவள்.

''ஸ்ருதி! இங்க என்ன பண்றே... பேசாமப் படுத்திருக்க வேண்டியதுதானே..?'' என்றபடி அருகில் சென்றபோது திடுக்கிட்டுத் திரும்பியவள், குமட்டிக் கொண்டு வரவும், அப்படியே அவன் மேலேயே வாந்தி எடுத்து விட்டாள்.

அவளுக்குப் பிறகுதான், நடந்ததே புரிந்தது. ஆபீஸுக்குச் செல்லத் தயாராகி வந்தவன் மேல் இப்படிச் செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வு உறுத்த, கண்களில் ஒரு வித கெஞ்சலுடன் 'ஸாரி...'' என்றாள்.



''பரவாயில்லை! நான் குளிச்சிட்டு வேற ட்ரெஸ் மாத்திக்கறேன்.. நீ முதல்ல சுத்தம் பண்ணிட்டு வெளிய வா.. வேணாம்! நீ தனியா இருக்க வேணாம்.. நான் போய் அந்த சமையல்காரம்மாவை அனுப்பறேன்..'' என்றவன் ''ஏதாவது சாப்பிட்டியா?'' என்றபோது அந்தக் குரலில் தெரிந்த அக்கறையில், ஸ்ருதிக்கு விழியோரம் நீர் கட்டியது.

விழிக் கடையில் துளிர்த்த ஒற்றை வைரம் வேகமாய் வழிந்து விடைபெற்றது. அவள் கண்ணீரைக் கண்டதும், ''உனக்கு ரொம்ப முடியலையா? நான் நாளைக்கே அம்மாவை வரச் சொல்றேன்.. சுந்தரிம்மா..!'' என்று இரைந்தான்.

பதறி ஓடி வந்தவரிடம் அவளை ஒப்படைத்துவிட்டு, ''நாளைக்கு அம்மா வந்துடுவாங்க... அதுவரைக்கும் நீங்க இவ கூடவே இருக்கணும். இவ ஏன் இப்படி கஷ்டப்படறா?'' என்றான் ஒன்றும் புரியாமல்.

நிற்க முடியாமல் தள்ளாடிய ஸ்ருதியை அணைத்துக் கொண்டவர், ''அது அப்படித்தாங்க.. முதல்ல ஒரு அஞ்சு மாசம் வரைக்கும் இப்படித்தான் இருக்கும்.. கவலைப் படாதீங்க தம்பி'' என்றார்.

அவளையே ஆழமாக நோக்கி விட்டு ஒரு பெருமூச்சுடன் தலையைக் குலுக்கியவன் விரைந்து தன் அறைக்குச் சென்று குளித்து விட்டு வந்தான். உடனே ஃபோன் செய்து தன் அம்மாவை மறுநாளே கிளம்பி வரச் சொன்னவன், ஆபீஸுக்குப் போன் செய்து மதியத்துக்கு மேல் வருவதாகக் கூறிவிட்டு, அவளைப் பார்க்கச் சென்றபோது, ஓய்ந்து போய்ப் படுத்திருந்தாள் ஸ்ருதி.

அவன் சுந்தரியிடம் ''நீங்க போய் சமையலை கவனிங்க.. நான் பாத்துக்கறேன். மதியம் சாப்பிட்டுத்தான் நான் வெளியே போறேன்'' என்றான்.

தனிமை இருவரையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. ஒரு புத்தகத்தை விரித்து வைத்திருந்தாலும், அவன் கவனம் முழுவதும் அவளிடமே இருந்தது. கண்களை இறுக மூடி ஒருவித சோர்வுடன் படுத்திருந்தாலும், அவள் மனம் அவனுடைய அருகாமையில் குளிர் காய்வதாய்!

தன் குழந்தைக்காக இன்று இவ்வளவு பார்க்கிறானே... அன்று தன்னை யாரோ ஒருவரின் மகள் என்பதால்தானே அவ்வளவு அலட்சியப்படுத்தினான் என்று தோன்றியது. குழந்தை பிறந்த பிறகு, அவன் மாறி விடுவானோ என்று அலைபாய்ந்த மனதை அடக்கி நத்தையாய் மனதைச் சுருக்கிக் கொண்டாள் ஸ்ருதி.

'எனக்கு என் குழந்தையின் அன்பு போதும், இவனுடைய போலித்தனமான அன்பும், கரிசனமும் தேவை இல்லை' என்ற வீம்பு உடனே மனதில் வந்தது... ஆனால், அவன் அன்பைத் தேடி அலையும் மனதை அடக்க முடியவில்லை! எதையோ கூறத் துடிக்கும் அவள் விழிகள், புரிந்து கொள்ளப்படாமலே!

கனவுகளில் மட்டுமே அவன் நேசம் கிடைப்பதால், உறக்கத்தைத் தேடி விழித்திருந்தது மனது. அவனுக்கோ, தன்னுடைய மாற்றம் புரியாத புதிராய்! தன் மனம், ஏன் நிமிடத்துக்கொரு முறை நிறம் மாறுகிறது என்று கேள்விக்கு பதிலாய், அவளுடைய கொலுசின் கீர்த்தனைகள்!



## 8

*என் கனவிலும்*
*தன் கவடைப் பதித்து...*
*ஆழ்மன வெளியில்*
*ஆயிரம் கவிதைகளை...*
*ஸ்ருதி லயத்துடன்*
*சுவாசிக்கின்ற ஜதியாய்...!*

மறுநாள் காலையிலேயே, பரமசிவமும் நீலாவும் வந்துவிட்டார்கள். வந்தவுடனே மருமகளின் கன்னங்களைப் பாசமாக வருடிய நீலா, ''ரொம்ப சந்தோஷம்மா... நீ வந்து எங்க வீட்டுக்கு விளக்கேத்தி வச்சிட்டே..'' என்றவர், ''ப்ரகதீஷ்... நீ இனிமே தைரியமா ஆபீஸுக்குப் போகலாம், நான் ஸ்ருதியைப் பாத்துக்கறேன்'' என்றார்.

சுந்தரியிடம் சென்று, ஸ்ருதிக்கு என்னென்ன செய்து தர வேண்டும் என்பதைப் பட்டியலிட்டு விட்டு வந்து அவளிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அவள் மனதுக்குப் பெரும் இதமாக இருந்தது. வேளாவேளைக்கு அவளைச் சாப்பிட வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர், இடையிடையே ஜூஸ், சூப், கஞ்சி என்று செய்து கொடுத்து அவளை சாப்பிட வைத்தார்.

ஊரிலிருந்து ரமணியும் தினமும் ஃபோனில் பேசிக் கொண்டு இருந்தார். அன்று மாலை மூவரும் ஹாலில் பேசிக் கொண்டிருந்தபோது ப்ரகதீஷ் சீக்கிரமே வந்து விட்டான். ''என்ன.. மாமியாரும், மருமகளும் சேர்ந்து ஒரே அரட்டைக் கச்சேரியா?'' - கிண்டலாகக் கேட்டுக் கொண்டே வந்து, ஸ்ருதியின் அருகில் இயல்பாக அமர்ந்தான்.

அவளுக்குத்தான் உடனே பதறி விட்டது. அவன் அருகாமை அன்று நடந்ததை உடனே நினைவுபடுத்தி, மனதை பதறச் செய்தது. வேகமாக எழுந்தவள், ''அத்தை! நான் கொஞ்ச நேரம் போய் படுக்கறேன்'' என்று கூறிவிட்டு தன் அறைக்குச் சென்று விட்டாள்.

அவளையே யோசனையுடன் கவனித்துக் கொண்டிருந்த வன், ''அம்மா.. அவ ஒழுங்கா சாப்பிடறாளா? எப்படி இருக்கா? இன்னும் மயக்கம், வாந்தி எதுவுமே சரியாக லையா?'' அக்கறையுடன் கேட்டான்.

''இப்ப நல்லா இருக்காப்பா.. ஒரு அஞ்சு மாசம் இப்படித்தான் இருக்கும். அப்புறம் சரியாயிடும். நான் காபி போடறேன். நீ போய் ஸ்ருதிகிட்ட பேசிட்டிரு..'' இங்கிதத் துடன் கூறி விட்டு உள்ளே சென்றார் அவர்.

அவளுடைய அறைக்குச் சென்றபோது ஜன்னலருகே நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ருதியின் முகம், தீவிர சிந்தனையிலிருந்தது. அவன் வரும் சத்தம் கேட்டதும், 'என்னத்தை..'' என்று முகம் மலரத் திரும்பியவளின் முகம், அவனைக் கண்டதும் அனிச்ச மலராய் கூம்பியது.

அதைப் பொருட்படுத்தாமல் அவளருகில் வந்தவன், ஸ்ருதி! ஏன் இங்கே வந்து தனியா நின்னுட்டு இருக்கே? ங்கே எல்லாரோடையும் சேர்ந்து பேசிட்டிருக்க பண்டியதுதானே?'' என்றான் மெதுவாக.

ஒரு பெருமூச்சுடன் ''நான் இவ்வளவு நேரம் அவங்க ாடதான் பேசிட்டு இருந்தேன்'' என்றாள்.

'ஆனா, நான் வந்ததுதான் பிடிக்கலை இல்லை?'' தாழ்ந்த ரில் அவன் கேட்டபோது, அவள் மனம் படபடத்தது.



சமாளித்து நிமிர்ந்து, ''என்கிட்டே அன்பா இருந்தா, நானும் பிரியமா இருப்பேன். சந்தர்ப்பத்துக்கு தகுந்த மாதிரி அன்பா இருக்கிற மாதிரி நடிக்கிறவங்க கிட்டே நான் மட்டும் எப்படி இயல்பாக இருக்க முடியும்?'' என்றபோது அவன் முகம் கோபத்தில் இறுகியது.

''அப்ப.. நான் நடிக்கிறேங்கறியா? ஏன்.. நீ கூடத்தான் நடிக்கிறே! மனசுல எவனையோ வச்சுக்கிட்டு, என் குழந்தையை சுமந்துகிட்டு, என் கூட சந்தோஷமா இருக்கிற மாதிரி மத்தவங்க கிட்டே நடிக்கிறியே... அதுக்குப் பேர் என்னவாம்?'' அடிக்குரலில் சீறினான்.

அவளுக்குள்ளே எதுவோ அடைப்பது போல்! ஏன் என் வாழ்க்கை மட்டும் இப்படி ஆக வேண்டும் என்ற சுய பச்சாதாபம் எழுந்துவிட, தான் அவனை மட்டும்தானே மனதில் சுமக்கிறோம் என்ற நினைவு அவளுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவும், அவள் கோபம் கரை உடைந்தது.

''சரி.. ரெண்டு பேருமே நடிக்கிறோம்... உண்மைதான்! ஆனா அதை மத்தவங்க முன்னால செஞ்சா போதும்..! எனக்கும் உங்க மனசுல யார் இருக்காங்கன்னு தெரியும்!''

கண்ணோரம் சுருங்க, முகத்தில் சினம் வந்து குடி கொள்ள, ''ஓ! உனக்கு எல்லாமே தெரியும்... அப்படித்தானே? ஆனா இப்ப சொல்றேன்... என் மனசுல இருக்கிறதை நீ என்ன, யாராலயும் கண்டு பிடிக்க முடியாது!'' என்று உறுமிவிட்டுச் சென்றான் அவன்.

மனமும் உடலும் சோர்ந்துவிட, படுக்கையில் சாய்ந்து கொண்டாள் ஸ்ருதி. அவள் விழிகள் மௌனத் தாழ்ப்பாளாய் மனதையும் சேர்த்து மூடியபடி அவன் நினைவுகளை மட்டும்

சமந்தது. மகனுக்கு காப்பி கொடுத்துவிட்டு வந்த நீலா, ''என்னம்மா... டயர்டா.. இருக்கா? ஏதாவது குடிக்கறியா?'' என்றார் கனிவுடன்.

''அதெல்லாம் வேண்டாம் அத்தை. கொஞ்ச நேரம் படுத்திருந்தா சரியாயிடும்'' என்றபடி சுருண்டு படுத்துக் கொண்டாள்.

நேரே ப்ரகதீஷிடம் வந்தவர், ''என்னாச்சுப்பா.. உன் முகமும் சரியில்லை. ஸ்ருதியும் என்னவோ போல் இருக்கா. அவளை ஏதாவது திட்டினியா என்ன? இந்த நேரத்துல அவ கவலைப்படாம பாத்துக்கணும்'' பரிவுடன் கூறினார்.

என்ன பதில் சொல்வதென்று யோசித்தவன், ''இந்த வீடு இனி பத்தாதே.. மாத்திடலாமான்னு கேட்டேன். வேற வீடு வாங்கிடலாம்னு சொன்னேன். அவ வேண்டாம்னா... அதான்..'' என்று ஏதோ கூறி முடித்தான்.

''என் மருமக புத்திசாலிப்பா! இதுமாதிரி சமயத்துல புதுசா வீடு கட்டி குடிபோகக் கூடாதுங்கற சம்பிரதாயம் உனக்குத் தெரியலைன்னாலும் அவளுக்குத் தெரிஞ்சிருக்கே..!'' என்று சிரித்து விட்டு ஸ்ருதியிடம் வந்தார்.

''இப்பதாம்மா எனக்குப் புரியுது... ப்ரகதீஷ் எல்லாம் சொன்னான். நீ சொன்னதுதான் சரி!'' என்று கூறியபோது விதிர்த்துப் போய் நிமிர்ந்தவளிடம், அவர் வீட்டு விஷயத்தைப் பற்றிக் கூறவும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது அவளிடம்.

''ஓ.. அதுவா?'' என்றபடி இயல்பானவளை ஒய்வெடுக்கச் சொல்லிவிட்டு அவர் சென்றதும், அவள் மனதில் இந்த மாதிரி கண்ணாமூச்சி ஆட்டம் ஆடியே தன் வாழ்க்கை முடிந்து



விடுமோ என்ற விரக்தி சூழ்ந்தது. மறுநாளே பரமசிவம் கிளம்பி விட, மூன்றாவது மாதம் வரை நீலா அவளுடனே இருந்தார். ஊரில் ஒரு திருமணத்திற்குச் செல்ல வேண்டும் என்பதால் அவரும் கிளம்ப வேண்டி வந்தது.

ப்ரகதீஷிடம் ''அடுத்த வாரம் நான் ஊருக்குப் போக ணும்ப்பா. ஸ்ருதியையும் நான் என்னோடவே அழைச்சிட்டுப் போயிடறேன். அங்கே ஒரு மாசம் இருக்கட்டும். இங்க அவளைத் தனியா விட்டுட்டு என்னால அங்கே நிம்மதியா இருக்க முடியாதுப்பா'' என்றவரின் குரலில் ஆர்வம் தெரிந்தது.

ஒரு கணம் யோசித்தவன், ''சரிம்மா! ஆனா அவங்கம்மா வோட இருக்கணும்னு அவ விரும்பினா என்ன பண்றது? அவளைக் கேட்டீங்களா?'' என்றான்.

''என்னப்பா.. அத என்னைக் கேக்கச் சொல்றே...? நீதான் கேக்கணும்!'' எனும்போதே, ''நான் உங்களோடவே வரேன் அத்தை! எனக்கும் ஒரு சேஞ்சா நல்லா இருக்கும்'' என்றபடி ஸ்ருதி வந்தபோது ப்ரகதீஷின் முகம் இறுகி எந்த உணர்ச்சியும் இன்றிப் போனது.

அந்த வாரமே ரயிலில் முதல் வகுப்பில் இருவரும் கிளம்பிச் சென்றனர். ரயில் நிலையத்துக்கு காரை எடுத்துக் கொண்டு பரமசிவமும், டிரைவரும் வந்திருந்தனர். திருமணம் முடிந்து ஒருமுறைதான் இங்கு வந்திருக்கிறாள் அவள் இப்போது வந்தபோது அந்த வீட்டின் அமைப்பே அவளை மிகவும் கவர்ந்தது. அவளுடைய பாட்டி வீட்டை உடனே கண்முன் கொண்டு வந்தது.

அங்கு அனைவரும் அவளைப் பூவாய்த் தாங்கினா ஆனாலும் ப்ரகதீஷின் நினைவுகள் அவளுக்குள் ஆழமாய்

படர்ந்து இம்சை செய்தது. குழலுக்குள் நுழைந்த காற்றைப் போல், தனக்குள் அவன் நினைவுகளின் வருடல் புரிவதாய்! முன்பு எவ்வளவுதான் பாராமுகமாக அவன் நடந்திருந்தாலும் இப்போது அவன் காட்டிய சிறிதளவு நேசம் மட்டுமே நினைவில் படர்வதாய்!

குழந்தைக்காகவே என்றாலும் இந்த நிமிடங்களாவது அவன் தன் மேல் அன்புடன் இருக்கிறானே என்று மனம் சமாதானமாகியது.

அங்கு ப்ரகதீஷுக்கோ அவளுடைய நினைவுகள் இன்னும் அதிகமாய் வாட்டுவதாய்! அவள் இல்லாத இடம் வெற்றிடமாய்... அவன் மனதைப் போலவே! இந்த அளவுக்கு அவள் பிரிவால் தான் பாதிக்கப்படுவோம் என்று அவன் நினைக்கவே இல்லை.

அன்பை வெளிப்படுத்தா விட்டாலும் அவள் தன்னருகில் இருக்கிறாள் என்ற எண்ணமே நிம்மதி அளிப்பதாய்! இப்போது அதற்கும் வழியின்றிப் போகவே மனம் அவளைத் தேடி அலைபாய்ந்தது.

தனிமையின் அமைதியில் அவளுடைய கொலுசுச் சத்தம் மட்டும் எங்கோ தூரத்தில் ஒலிப்பது போல் ஒரு பிரமை! ஆபீஸிலும் இதே நினைவுகள் அவனை ஆட்கொண்டதால் அவனால் இயல்பாகவே இருக்க முடியாமற் போனது. ஞாயிற்றுக்கிழமை கிளம்பிச் சென்று அவளைப் பார்த்து விட்டு வரலாம் என்று கிளம்பினான்.

ஸ்ருதி அன்று காலையில் எழுந்து டிபன் சாப்பிட்டு விட்டு, டி.வி.யின் முன் அமர்ந்தபோது செய்திகளில், 'சென்னையில் இன்று நிலநடுக்கம்... மக்கள் பீதி' என்று கூறியதும் அது அவளுக்குள்ளும் அதிர்வை ஏற்படுத்துவதாய்!



உடனே பதறிப் போய் நீலாவிடம் சென்றவளின் கண்களில் கண்ணீர்ச் சரங்கள்! ''என்னம்மா... ஏன் அழறே?'' என்றார் நீலா பதட்டத்துடன். சிறிது நேரம் ஒன்றும் கூறாமல் அழுதவள், ''எனக்கு பயமா இருக்கு அத்தை!'' என்றபடி விஷயத்தைக் கூறினாள்.

சென்னைக்கு உடனே ஃபோன் செய்தபோது ரிங் போய்க் கொண்டே இருந்தது. யாரும் எடுக்கவில்லை. செல்லுக்கு ஃபோன் செய்தும், லைன் கிடைக்கவில்லை. ஸ்ருதிக்கு புலன்கள் ஓய்ந்து போய், மனதில் பயம் பிரவாகமாய் எழ, அப்படியே சரிந்து அமர்ந்தாள். கண்ணீர் சரம் கோர்த்தது.

## 9

*நீ அழகா...*
*உன் பாதக் கொலுசொலி அழகா...*
*இனம் பிரிக்க முடியாதபடி...*
*உன்னுடன் இணைந்த*
*அனைத்துமே...*
*மிக அழகாய்...!*

நீலா உள்ளூரப் பயந்தாலும், ஸ்ருதியை அணைத்துச் சமாதானப்படுத்தி, ''ஒண்ணும் ஆகாதும்மா... பயப்படாதே! நீ அமைதியா இரு. நான் மாமாவை விட்டு திரும்பவும் ஃபோன் பண்ணச் சொல்றேன்'' என்று அமர வைத்துவிட்டு, வேகமாகத் தன் கணவரிடம் சென்றாள்.

''டி.வி.யில என்னென்னவோ சொல்றாங்க... எனக்குப் ரொம்ப பயமா இருக்கு. உடனே ப்ரகதீஷுக்குப் ஃபோன் பண்ணுங்க.. ஸ்ருதி ரொம்ப அழறா...'' அவர் பதட்டமாக கூறி விட்டு அழவும், அவர் உடனே வந்து ஃபோன் செய்ய, எதிர்

முனையில் மணி அடித்துக் கொண்டே இருக்கவும், அவர் மனதிலும் பதட்டம் நிலவியது.

''வீட்டில யாரும் இல்லை போலிருக்கே. இன்னிக்கு சண்டே தானே'' என்று யோசனையாக அவர் கூறவும், வேகமாக நிமிர்ந்த ஸ்ருதி, ''மாமா! அவர் இன்னைக்கு கார் எடுத்துட்டு பீச்சில போய் ஜாகிங் பண்ணுவாரு... அப்பாடா..'' என்று நிம்மதியாகச் சாய்ந்தாள்.

பரமசிவம் பிறகு செல்லுக்கு முயற்சி செய்தபோதும் தொடர்பே கிடைக்கவில்லை. ஃபோன் ஒலித்ததும், ப்ரகதீஷாகத்தான் இருக்கும் என்று ஆர்வமாக எடுத்தால் கோவையிலிருந்து வாசுதேவன்தான் பேசினார்.

''சென்னையில் கடல் பொங்கிட்டதா சொல்றாங்க... மாப்பிள்ளை ஏதும் ஃபோன் பண்ணாரா? எப்படி இருக்கார்?'' என்ற உடனே திரும்பி, ''அந்த டி.வியப் போடு'' என்று இரைந்தார் பரமசிவம். ''நான் அப்புறம் பேசறேன்!'' என்று கூறி வைத்துவிட்டு டி.வி.யைப் பார்க்க ஆரம்பித்தார்.

சோபாவில் அப்படியே மடங்கி அமர்ந்து அழ ஆரம்பித்த ஸ்ருதியை சமாதானப்படுத்திய நீலா, கண்களில் கண்ணீருடன் ''ஆண்டவன் நமக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டான்மா! பாரு.. ப்ரகதீஷே ஃபோன் பண்ணுவான். நீ இப்படி அழக் கூடாது. தைரியமா இருக்கணும்மா..'' என்றவரின் குரலில் பரிதவிப்பு மிகுந்திருந்தது.

அவளை ஓய்வெடுக்க வைத்துவிட்டு, பதட்டத்துடன் அவர் ஹாலுக்கு வந்தபோது பரமசிவம், தன் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். உடனே பூஜை அறைக்குச் சென்று பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார் நீலா.



வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு பரமசிவம் எழுந்து போய்ப் பார்த்தால், ப்ரகதீஷ் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். அவருக்கு அப்போதுதான் இயல்பான மூச்சே வந்தது. மனசிலிருந்த பாரம் விடைபெற்றுச் சென்றது.

அவர் வேகமாக வந்து, ''ப்ரகதீஷ்!'' என்று கைகளைப் பிடித்தவுடன், ''என்னப்பா.. டி.வி.யில நியூஸ் பாத்துட்டு பயந்துட்டீங்களா? எனக்கே டிபன் சாப்பிட நிறுத்தினப்பதான் சென்னையில பூகம்பம்னு தெரியும். இங்க உடனே ஃபோன் பண்ணினா லைனே கிடைக்கலை. நான் அஞ்சு மணிக்கே கிளம்பிட்டேன். செல்லிலயும் கிடைக்கலை. இங்க திருச்சிக்கு வந்தப்புறம்தான் தெரிஞ்சது... கடல் பொங்கின விஷயம்! அப்பவும் ட்ரை பண்ணேன். எங்கேஜ்டாவே இருந்தது.. நேராவே போயிடலாம்னு வந்துட்டேன்'' என்றான்.

''இங்கே ஸ்ருதி ரொம்பவே பயந்துட்டாப்பா. வீட்டுக்கும், செல்லுக்கும் போட்டா லைன் கிடைக்கவே இல்லை. அப்புறம் மணி அடிச்சிட்டே இருந்தது. அவ ஒரே அழுகை! இப்பதான் போய் படுத்தா.. அவளை முதல்லே சமாதானப்படுத்து... போ!'' என்று அவர் கூறிய உடனே, அவன் முகம் இளகி மென்மையாக கண்கள் பளபளத்தது.

அவளிருந்த அறைக்குள் நுழைந்தபோது அவள் உடல் குலுங்க அழுது கொண்டிருப்பதைக் கண்டவுடனே மனம் பதைத்தாலும் தனக்காக அவள் அழுவது அவனுக்குள் இனிதான சுகமாய்!

''ஸ்ருதி...'' அவன் குரல் மென்பனித் தென்றலாய், அவள் காதுகளை வருட, ஒரு நொடி அசைவின்றிப் போனவள் 'இது பிரமையோ' என்ற பயத்துடன் திரும்பியபோது அவள் விழிகள் விரிந்தன. எப்படித்தான் பலம் வந்ததோ...

மின்னலென ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டு விம்ம ஆரம்பித்தாள் அவள்.

ஒரு கணம் ப்ரகதீஷுக்கும் ஒன்றும் புரியவில்லை. வில்லிலிருந்து விடுபட்ட அம்பு, மலர்களைச் சுமந்து வந்து தன் மீது மோதியதைப் போலிருந்தது. அவளுடைய அழுகையின் மொழி புரிந்து, மனம் லேசாகிப் பறந்தது.

அவளை அணைத்து சமாதானப்படுத்தியவன், கட்டிலின் அருகே சென்று ஸ்ருதியை அமர வைத்தான். சிறிது நேரம் கழித்து, தன் நிலை புரிந்து ஒரு திடுக்கிடலோடு அவள் விலக ஆரம்பித்த போது தன் செயலை நினைத்து உடனே வெட்கம் வந்தது.

''ஸ்ருதி.. இந்த மாதிரி சமயத்துல இப்படி அழறது, பதட்டப்படறதெல்லாம் கூடாதுன்னு டாக்டர் சொன்னாங்க இல்லையா?'' அக்கறையுடன் கேட்டான். அவள் மௌனமாக தலையாட்டியபோது அறைக் கதவு மெலிதாகத் தட்டப் பட்டது.

கதவைத் திறந்த ப்ரகதீஷைக் கண்டதும், நீலா கண்ணீருடன் அவன் முகத்தை வருடினார். ''நாங்க எல்லாருமே ரொம்பப் பயந்துட்டோம்ப்பா... வரதுக்கு முன்னாடி ஒரு ஃபோன் செஞ்சிருக்கலாமில்லையா?'' ஆதங்கத்துடன் கேட்டவரிடம், ''அம்மா... எனக்கு ஒன்னும் ஆகாது. ஒரு சர்ப்ரைஸா இருக்கட்டுமேன்னுதான் பண்ணலை. வர வழியிலதானே எனக்கே தெரியும். உடனே ட்ரை பண்ணிட்டேதான் இருந்தேன். லைன் கிடைக்கவே இல்லை. நேரிலயேதான் போறோமேன்னு வேகமா வந்துட்டேன்'' ஓரக் கண்ணால் அவளையே பார்த்தபடி கூறினான்.



ஸ்ருதியை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு, டி.வி. பார்த்தபோதுதான் சுனாமி என்ற துறைமுக அலையின் பேரழிவு எந்த அளவுக்கு கடலோரங்களைப் பாதித்திருக்கிறதென்று புரிந்தது. பார்த்த காட்சிகள் மனதை உறையச் செய்தது.

பூபாள நேரத்தில் மரண ஒத்திகையாய் மண்ணை அதிர வைத்து, பிறகு சில மணித் துளிகளில் மரணத்தின் பிடியில் மனிதர்களை சிதற வைத்து, கோரத் தாண்டவமாடியிருந்தாள் கடலன்னை! இன்று மட்டும் ஏன் உன் மடியில் ரௌத்ரம் சுமந்தாய் என்று கேட்க வேண்டும் போல! இந்த வருடத்தின் எழுதப்படாத விதியாய் மழலைகளை உனக்கும் மிகவும் பிடித்ததோ என்றும் கேள்வி எழுந்தது.

கடலென்றால் களிப்பாகும் மனது. இன்றோ கர்ப்பம் வரை கலங்கியது. தன் மடியில் அன்புடன் தாலாட்டிய அந்த மீனவர்களை இன்று ஏன் கடல், அசுரத்தனமாய் தாலாட்டி தன் கரையிலேயே உறங்கச் செய்தது என்பது புதிராய்!

அனைவரின் மனமும் பெரும் சோகத்தைத் தத்தெடுப்பதாய்! அன்றைய விடியலே மரண ஓலத்துடன் விடிந்தது. பெரும் கொடுமையாய்! ஸ்ருதியின் மனம் பலவீனப்பட்டு விடும் என்று அவளை அறையிலேயே இருக்க வைத்தான் ப்ரகதீஷ்.

## 10

**என் உணர்வுகளை வருடி...**
**இதயம் தட்டி எழுப்பி...**
**உன் வருகைக்கு**
**கட்டியம் கூறும்...**
**அழகு மொழியாய்...!**

மறுநாளே ப்ரகதீஷ் சென்னைக்குக் கிளம்பினான். பாதிக்கப்பட்டவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற வேட்கை, அவனுள் அதிகமாய்! சென்னைக்கு சென்று தன்னார்வத் தொண்டு நிறுவனங் களுடன் சேர்ந்து உதவிக் கரம் நீட்டியபோதுதான் தெரிந்தது. ஆழிப் பேரலையின் வருகைக்கு சாட்சியாய் மணலைக் கீறி முளைத்து வந்த மனித விதைகளின் எண்ணிக்கை, அந்த வானத்து நட்சத்திரங்களுக்கு ஈடாய்!

மனிதர்களுக்குள் இருக்கும் ஈகோவுக்கும், போட்டி மனப்பான்மைக்கும் நடுவில் இயற்கை நான்தான் பெரிதென சீற்றத்தை வெளிப்படுத்தி இருந்தது. ஆனால் மனித சமுதாயம் ஒன்றுபட இத்தனை பேரழிவு தேவையா என்று தோன்றி னாலும் மனித நேயம் அங்கு மிகுந்திருந்தது.

எத்தனையோ முறை, எதையோ மனிதனிடம் கூற வந்து மௌனமாக திரும்பிச் சென்று அன்று மௌனக் கரை உடைத்து மனிதர்களை விழுங்கி விட்டு இன்று சாதுவாய் பரந்து விரிந்திருக்கும் கடலைக் காணும் போது, மனதில் பயம் வந்தது - எத்தனை கனவுகளை விழுங்கி இருக்கிறதென்று!

ஆபீஸிலும் எல்லோரிடமும் நிதி வசூல் செய்து, தன் பங்கையும் சேர்த்து சுனாமி நிதிக்கு அனுப்பிய போதும் மனம் சமாதானமாகாமல் தவித்தது. காலம் மனப்புண்ணை ஆற்றும் என்பது போல, மக்கள் மெதுவாக சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். மாற்றம் என்பது உலக இயல்பாய்! பொங்கலுக்கு ஊருக்குச் செல்லும் வழி எல்லாம் ப்ரகதீஷின் மனம் பெரும் யோசனையில் இருந்தது.

மனிதனுக்குள்தான் எத்தனை நிஜங்கள். ஈகோ... ஏற்பிரிவினைகள்! எல்லாமே இயற்கையின் முன் ஒரு



நொடியில் காணாமல் போய்! மனம் ஸ்ருதியின் நினைவுகளிலேயே உழன்றது. வீசுகின்ற பூந்தென்றலாய் மனதை வருடியது. அவளிடம் சிக்கிக் கிடந்த தன் உயிரை யாசகம் கேட்டது உள்ளம்.

ஊருக்குச் சென்றவுடன் அவளைத் தனியே அழைத்தவன், ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தி, ''ஒண்ணு சொன்னாக் கோச்சுக்க மாட்டியே? உன்னோட காதலனும் உன்னை விரும்பலை.. நான் காதலிச்சவளும் தொலைஞ்சு போயிட்டா... அவங்களுக்காக நாம ஏன் கஷ்டப்படணும்? நீ உன் மனசை மாத்திக்க முயற்சி செஞ்சா, நானும் ட்ரை பண்றேன்... இனிமே நாம ரெண்டு பேரும் நல்ல ஃப்ரெண்ட்ஸ்... ஓகே!'' என்றான் வலது கையை நீட்டியபடி.

மெதுவாக நிமிர்ந்தவளின் விழிகளில் மெல்லிய மின்னலின் சாயல்! சிறு முறுவலுடன், 'ஃப்ரெண்ட்ஸ்!' என்று தன் விரல்களை அவனுடன் இணைத்தபோது, அவன் ஸ்பரிசம் புதிதாய்! 'எனக்குள் விரவி இருக்கும் நேசத்தை உன் விரல்களின் ஸ்பரிசம் விலை கொடுத்து வாங்கி விட்டதோ' என்று கேட்க வேண்டும் போல்! 'எனக்கே தெரியாமல் என் இதயத்தையும் பறித்தது நீதான்' என்று கூற வேண்டும் போல்! ஆனால் மௌனம் மட்டுமே பாலமாய் இருந்தது.

மெதுவாக எழுந்து வெளியே செல்லும் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் ப்ரகதீஷ். மனம் அவளைச் சுற்றியே! தன் பழைய காதலை மறந்து தன்னை அவள் நேசிக்க ஆரம்பித்திருக்கிறாளோ என்ற எண்ணமே அவனுக்கு மகிழ்ச்சியை மீட்டுத் தந்தது!

பொங்கல் வரிசை வைக்க வாசுதேவனும், ரமணியும் வர, பழைய உற்சாகம் கைவசப்பட்டது. பொங்கல் பண்டிகையை

சிறப்பாகக் கொண்டாடி விட்டு அன்றே பாட்டி வீட்டுக்கும் போய் வந்தாள் ஸ்ருதி. தஞ்சாவூரில் இருந்தவரை பாட்டி அடிக்கடி வந்து பார்த்துச் சென்றதால் இனி அவரை அடிக்கடி பார்க்க முடியாததே ஏக்கமாய்!

அனைவரிடமும் விடை பெற்று, மறுநாள் இரவு இருவரும் ரயிலில் சென்னைக்குச் சென்றனர். ஸ்ருதியின் உடல் நிலை நன்றாகத் தேறி, பழைய தொந்தரவுகள் குறைந்திருந்தது. நாள் செல்லச் செல்ல, வயிற்றினுள் குழந்தையின் முகவரி அதிகமாகத் தெரிய ஆரம்பித்தது. குளுக் குளுக் என்று வயிற்றினுள் எதுவோ பிறழ்வது போல்!

அவர்கள் இருவரிடையேயும் ஏதோ ஒரு நட்பின் இழையோடல் தெரிவதாய்! காலம் அமைத்திருந்த சிநேகப் பாலமாய், புதிதாய் ஒரு இயல்பு நிலை வந்திருந்தது. காலை நேரத்தில் ப்ரகதீஷ் அவளைத் தோட்டத்திலேயே தன்னுடன் தினமும் நடந்துவரச் சொன்னான்.

மாதம் ஒரு முறை, டாக்டரிடம் அழைத்துச் செல்லும் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்டான். அன்றும், ஸ்ருதியை அவன் அறையில் காணாமல் தேடியவன், அவள் தோட்டத்தில் நின்றிருப்பதைப் பார்த்துவிட்டு அங்கு வந்தான்.

''ஸ்ருதி... இங்க வந்து தனியா என்ன பண்றே?'' அவன் ரலில் திடுக்கிட்டுத் திரும்பியவள், ''அங்கே பின் வீட்டில் ரண்டு புறா இருக்கு... அதை வேடிக்கை பாத்துட்டிருப்பேன். து ரெண்டும் எவ்வளவு அன்யோன்யம் தெரியுமா? ரியவே பிரியாது! அதைப் பாக்கும் போதுதான் ஷங்களோட பிரிவினை எல்லாம் நினைவுக்கு வருது!'' ல்பாக கண்கள் பளபளக்க கூறினாள்.



பிறகு அவன் என்ன நினைத்துக் கொள்வானோ என்று நினைத்து உதட்டைக் கடித்தபடி பயத்துடன் அவனை ஏறிட்டபோது, ப்ரகதீஷின் முகம் இறுகி இருந்தது. ''ஸாரி... நான் பொதுவாத்தான் சொன்னேன்'' என்றபோது உடனே வந்தது பதில்.

''நான் மட்டும் என்ன... நீ என்னைச் சொன்னதாகவா சொன்னேன். சரி.. வா.. உள்ளே போகலாம்!'' பட்டுக் கத்தரித்தாற் போல் வந்தது அவன் குரல். அவள் மனதில் சிறு கவலை வந்து குடியேறி, அவனிடம் இனி கவனமாகப் பேச வேண்டும் என்ற எச்சரிக்கை வந்தது!

அந்த வாரம் ஃபோன் செய்த ரமணி அவளிடம் ஏழாம் மாதம் ஊருக்கு அவளை அழைத்துச் சென்று வளைகாப்பு செய்ய வேண்டும் என்பதால் அடுத்த மாதம் வந்து அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

ப்ரகதீஷிடம் இதைக் கூறியபோது, அவன் முகம் ஏதோ யோசனையில்! 'நான் ஊருக்குப் போகாம உங்களோடவே இருக்கேன்னு ஒரு வார்த்தை சொல்லேன்' அவன் மனம் ஏங்கியது. 'நீ ஒன்பதாவது மாசம் போகலாம்... என்னால உன்னை விட்டுட்டு இருக்க முடியாதுன்னு சொல்லுங்களேன். நான் உங்களை விட்டுட்டுப் போக மாட்டேன்' அவள் மனம் உருகியது.

நாள் செல்லச் செல்ல, அவள் உடலிலும் பல மாற்றங்கள்! அடிவயிறு கனத்துப் போய் வயிற்றினுள் தெரிந்த சிறு சிறு அசைவுகள், அவளுக்குள் ஆனந்தத்தை விதைப்பதாய்! எல்லாவற்றையும் அவனிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மனம் விழைவதாய்! ஆனால் ஏதோ ஒன்று அவளை, அவனிடம் நெருங்க விடாமல் செய்தது.

அன்று டாக்டரிடம் சென்றபோது, அவர் ஸ்கேன் எடுத்துப் பார்த்து விட்டு குழந்தையின் வளர்ச்சி நன்றாக இருப்பதாகக் கூறினார். அந்த சிறு மலரைத் தன் கைகளால் எப்போது அள்ளி எடுக்கப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பு அவளுக்குள் பெரிதாய்! வெயிலுக்கு மர நிழலில் இளைப்பாறும் பறவையாய் மனம் அவன் நினைவில் இளைப்பாறியது. ஆனால் அவன் மட்டும் ஏனோ ஒதுக்கமாகவே இருந்தான்.

அன்று காலையில் எழுந்தவள் ஆர்வமாய் பின்புறத் தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு இரு புறாக்களையுமே காணவில்லை.

அவளுடைய பூபாளமாய் கேட்கும் சீரான பாட்டுச் சத்தம் எங்கோ தொலைந்து போய்! அவள் அளிக்கும் தானியங் களைப் பாசமாய்ச் சாப்பிட வரும் கல் மேடை, இன்று அவள் மனதைப் போலவே வெற்றிடமாய்! புதிதாக வெள்ளை அடிக்க ஆரம்பித்திருந்தனர் அந்த வீட்டில்... இருள் சூழ்ந்தது ஸ்ருதியின் மனதில்!

அவள் சோகமாய் உள்ளே வந்தபோது அவள் பாதக் கொலுசொலியே சோகத்வனியாய்! அவளைக் கவனித்துக் கொண்டே வந்த ப்ரகதீஷ், ''என்னாச்சு! வலிக்குதா? டாக்டர்ட்ட போகலாமா?'' அக்கறையுடன் கேட்டான்.

''அதெல்லாம் இல்லை... அந்தப் புறா ரெண்டும் வேற டத்துக்குப் போயிடுச்சி போல இருக்கு.. காணோம்...'' என்றாள் சோகமாக.

''இதுக்கா இவ்வளவு சோகம்...?'' நம்ப இயலாமல் ட்டுவிட்டு அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தான் கதீஷ். பிறகு தலையை குலுக்கிக் கொண்டு அவள்



வெளியே சென்றபோது, முதல் முறையாக இருவரிடையேயும் இருந்த தடை நீங்கி, அவன் வெகு இயல்பாகச் சிரிக்க, அவள் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அவன் புன்னகைத்த பிறகு அவள் உலகமே வெளிச்சமாய்!

அன்று மாலையில் ஆபீஸிலிருந்து வந்தவன், ''ஒரு நிமிஷம் வெளியே வரியா?'' என்றபடி அவளை வாசலுக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஒரு கூண்டில் ஜோடிப் புறாக்கள் இரண்டு அழகாகத் தத்தித் தாவியது! வேகமாக அருகில் சென்று பார்த்த அவள் மனம், உடனே குதூகலமானது. ஆனால் கூண்டில் அடைபட்டிருக்கும் அதன் சோகம் அவளை மிகவும் பாதிப்பதாய்!

மறுநாள் காலையிலேயே ப்ரகதீஷிற்கு ஒரு ஃபோன் வர, அவள் எடுத்தபோது, ''நான் மிஸஸ் மாயா பேசறேன்! ப்ரகதீஷ் இருக்காரா?'' என்ற குரல் அவளுக்குள் இறங்க, ''ஒரு நிமிஷம்'' என்றபோது வார்த்தைகள் உடைந்தன. அவனிடம் கூறிவிட்டு தோட்டத்துக்குச் சென்றபோது மனம் எரிதழலாய்!

ஒருவேளை இவள்தான் அந்த மாயாவோ என்ற எண்ணமே கலக்கத்தை விதைத்தது! அவசரமாகக் கிளம்பியவனின் முகத்தில் பதட்டம் தெரிந்தது. அன்று மதியமும் அவன் சாப்பிட வரவில்லை. ஃபோன் செய்து கேட்டபோது, முக்கியமான வேலையாக இருப்பதாகவும், இரவு வருவதற்கு நேரமாகும் என்றும் கூறினான்.

ஏன் இன்று இப்படிப் பேசுகிறான் என்று யோசித்தவளுக்கு அவனுடைய ஆஃபீஸில் கம்ப்யூட்டர் வைரஸ் வந்து அதை சரி செய்ய எல்லா கம்ப்யூட்டர்களிலும் ஆண்டி வைரஸ் ப்ளாப்பியை வைத்து அவர்கள் முயன்று கொண்டு இருந்தது தெரியவில்லை.

பிஸல் மாயா என்பவள் அவனுடைய நண்பர் மாயாண்டியின் மனைவி என்பதையும் அவள் அறியவில்லை. இரண்டும் இரண்டும் மூன்று என்று உள்ளம் தப்புக் கணக்குப் போட்டது.

அன்றிரவு சோர்ந்து போய் வந்தவன் அவளைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அது அவள் மனதில் பெரும் வலியாய்! கண்கள் நேசத் தூண்டில் போட்டாலும் அதைத் தவிர்த்து விட்டு அவன் எங்கோ செல்வது போல் தோன்றியது.

மறுநாள் காலையில் மனமும் உடலும் பாரமாய் தோன்ற, ப்ரகதீஷ் தோட்டத்திற்கு சென்றபோது புறாக்களுக்கு தானியங்களை வைத்துக் கொண்டு இருந்த ஸ்ருதி கண்களில் பட்டாள். சிறு குழந்தை போல் அவளிடம் தெரிந்த உற்சாகம் புதிதாய்!

சிறிது நேரம் கழித்து அந்தக் கூட்டைத் திறந்து அந்தப் புறாக்களை அவள் பறக்க விடவும், முதலில் வெளியில் வந்த இரு புறாக்களுமே தத்தித் தாவி பிறகு மேலே பறந்து றகடித்து சுற்றிவிட்டு, சிறிது நேரத்தில் தூரத்துப் புள்ளியாய் ணாமல் போனது.

அவளுக்கு விட்டு விடுதலையாகி நிற்கும் கூண்டுப் வையாய் மனதின் ஓரம் பரவசமாய்! நெஞ்சம் நிறைந்த மதியுடன் திரும்பியபோது புருவங்கள் நெரிய, கோபமாய் த்து விழித்தபடி ப்ரகதீஷ் எதிரே நின்றிருந்தான். குற்ற ர்ச்சியுடன் நிமிர்ந்து "ஸாரி.." என்றவள், "எதையுமே டுக்குள்ளே அடைக்க வச்சா, அதோட இயல்பே மாறிடும். ங்களோட விருப்பமில்லாம, அதோட சுதந்திரத்தைப் க நமக்கு உரிமை இல்லை. எதுவுமே அதன் இயல்போட கறதுதான் அழகுன்னு நினைக்கிறவ நான்!" என்றவளின் வ பின் வீட்டு விதானத்தில் நிலைத்தது.



ஒரு பெருமூச்சுடன், "அந்த பின்னாடி வீட்டுல இருந்த புறா ரெண்டுமே, தானே வந்து அந்த சன்ஷேடுல கூடு கட்டி சுதந்தரமா இருக்கிறது. நீங்க வாங்கிட்டு வந்த புறா ரெண்டும் பாவம்... சுதந்திரமா சிறகடிக்கற பறவைகளை கூண்டில அடைச்சி வைக்க எனக்கு மனசு வரலே! அதான் திறந்து விட்டுட்டேன்" என்றாள் மெதுவான குரலில்.

அவளையே வெறித்தவனின் விழிகளில் சீற்றம் தெரிந்தது. முதல் நாளும் ஓய்வின்றி, இரவும் சரியாகத் தூங்காமல் சோர்ந்து இருந்ததில் கிளறி விட்ட தீயாய் மனம் எரிய ஆரம்பித்து, உள்ளிருந்த ஈகோ தலைதூக்கியது. அதுவரை அடிமனதில் சேமித்து வைத்திருந்த மென்மையும், நேசமும் எங்கோ தொலைந்து போனது.

"ஓ.. அப்ப நான்கூட உன்னை விருப்பமில்லாமதான் இந்த வீட்டுக்குள்ள அடைச்சி வச்சிருக்கேன்னு சொல்லாம சொல்றியா?"

"நான்.. நான் அப்படிச் சொல்லலை.. நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க..!" என்றபோது உயர்த்திய கைகளுடன், "போதும்..." என்று கோபமாய் அவளை இடைமறித்தவன், "ஆமாம்... நான் உன்னைத் தப்பாதான் புரிஞ்சுக்கிட்டேன் இதுவரைக்கும்... நீ உன் காதலை மறந்துட்டேன்னு! ம்ஹூம்... எவ்வளவு முட்டாள் பாரு நான்!" கண்கள் சிவந்து, வன்மம் தலைதூக்கியது அவன் குரலில்!

அதுவரை கட்டிக் காத்த பொறுமை காற்றில் பறக்க, "ஆமாம்! நான் எதையும் மறைக்கலை.. இந்த வீடு எனக்கு ஒரு சிறைதான்... ஆனால் எதையுமே பகிர்ந்துக்க ஆளில்லாத தனிமைச் சிறை! போதுமா?" என்றாள். அவளும் தாங்க முடியாத உணர்ச்சிகளை வார்த்தைகளாக்கி!

அதுவரை அவர்களிடையே ஒரு நூலளவு கோர்க்கப் பட்டிருந்த நட்பின் இழை, அவளின் கோப வார்த்தைகளால் அறுந்து போனது. ஒரு கணம் அப்படியே உறைந்து நின்ற ப்ரகதீஷ், பார்வையில் அடிபட்ட காயத்துடன் வேகமாக வெளியேறினான்.

## 11

*உன் சலங்கையின்*
*சங்கீதம் கேட்டு...*
*தான் இசைக்கவே மறந்ததை..*
*என் காதோரம்...*
*கிசுகிசுத்துச் சென்ற*
*குயிலின் கூவலாய்..!*

ஸ்ருதி அப்படியே இடிந்து போய் அமர்ந்திருந்தாள். 'நான் என்ன கூறினாலும் ஏன் என்னைத் தவறாகவே புரிந்து கொள்கிறான்' என்ற ஆயாசம் எழுந்தது. ஒருவேளை நேற்று பேசிய மாயாதான் இதற்கு காரணமோ என்றும் மனம் அலைபாய்ந்தது.

நேற்று இரவு அவன் சாப்பிட வராததும், கோபமாய் வீடு ந்ததும், மாயாவால்தானோ என்ற எண்ணமே உள்ளத்தை ருக்குவதாய்! மனதில் நிறைந்திருந்த காதல் மட்டும், காற்றுப் வும் இடமின்றி தவித்துத் திணறியது.

கருவறைக்குள் அந்த மழலையின் மெல்லிய அசைவு டும் ஒரு இனிய துணையாய்! 'உனக்கு நானிருக்கிறேன்' று கூறுவது போல்! அன்று இரவு வீட்டுக்கு வந்த தீஷின் விழிகள் சோர்ந்து சிவந்திருந்தன. உடை விட்டு வேகமாக அவளிடம் வந்தான்.



"உனக்கு விருப்பமில்லாத இடத்துல நீ இருக்க வேண்டாம். நாளைக்கு உனக்கும் எனக்கும் ஃப்ளைட்டில டிக்கெட் புக் பண்ணி இருக்கேன். உன்னை விட்டுட்டு நான் உடனே திரும்பிடுவேன். எனக்கு நிறைய வேலை இருக்கு... என் குழந்தை பிறந்த உடனே என்கிட்டே குடுத்துட்டு, நீ எங்க வேணா போகலாம்..!" என்றான் உறைந்த குரலில்.

சிலையாகி விட்ட ஸ்ருதி தன்னை சுதாரித்து நிமிர்ந்து, "இல்லை... காலையில நான் அந்த அர்த்தத்துல சொல்லலை!" அவள் குரல் காற்றில் கரைந்து தனி ஆவர்த்தனமாய்! அதைக் கேட்பதற்கு ப்ரகதீஷ் அங்கு இல்லை. அவள் மனதில் பட்டுப் புழுவாய் தன்னைச் சுற்றி கூடு கட்டிக் கொண்டு அதற்குள் வாழ வேண்டும் போல் ஒரு ஏக்கம் மனதில் வந்தது. பாரமாய் கனத்தது.

என் காதலன் நீ தான் என்று கூறவும் முடியாமல் அதை உள்ளே வைத்துப் புழுங்கியே தான் மடிந்து விடுவோமா என்று முதன் முதலாய் ஒரு பயம் மனதில் படர்ந்தது... கண்ணீராய் விழிக்கதவுடைத்து வெளியே சிதறியது.

மறுநாள் கிளம்பும் வரை, ப்ரகதீஷ் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஹாலுக்கு வந்தபோது, "ஒரு நிமிஷம்" என்று நிறுத்தியவன், "உனக்கு என்னைத்தான் பிடிக்காது.. ஆனா என்னோட குழந்தையையாவது பத்திரமா பாத்துப்பேன்னு நம்பறேன்" என்றான்.

"அது என் குழந்தையும்தான்!" என்று ஆவேசமாகக் கத்த வேண்டும் போலிருந்த மனதை அடக்கியபடி சூட்கேஸை எடுத்தாள். அவளருகில் வந்த ப்ரகதீஷ், "அதை முதல்ல கீழே வை... டாக்டர் வெயிட் தூக்கக் கூடாதுன்னு சொன்னது மறந்து

போச்சா? இல்லை.. என்னை டார்ச்சர் பண்ற மாதிரி குழந்தையையும் செய்ய நினைக்கிறியா?'' என்றான் குத்தலாக.

ஸ்ருதி சோர்ந்து போனாள். 'கடவுளே... அன்று என் மனதில் காதலை விதைத்து, இன்று என்னை வேதனையில் வதைக்கிறாயே' என்ற கேள்வி மனதில் மௌனக் கோரிக்கையாய்! வயிற்றினுள்ளே மெல்லிய அசைவு... மெதுவாக வருடிய போது 'எனக்கு நீ மட்டும் போதும்' என்று அந்த நிமிடம் மனம் சமாதானமடைந்தது. ப்ரகதீஷ், அன்று அவளை கோயம்புத்தூரில் விட்டுச் சென்றவன்தான்! பிறகு தினமும் அவளுடன் குழந்தையைப் பற்றி நலம் விசாரிப்பதோடு சரி, ஏனோ பிடிவாதமாக அவளைப் புரிந்து கொள்ள மறுத்தான்.

ஸ்ருதிக்கு வளைகாப்பு செய்ய ஏற்பாடுகள் நடந்தன. முதல் நாளே பாட்டி, மாமா குடும்பத்தினர் எல்லாம் வந்துவிட, வீடே கோலாகலமாய் இருந்தது. அவள் விழிகள் வாசல் வரை ஒரு தேடலுடன் சென்று சுவற்றுப் பந்தாய் திரும்பி வந்தன.

ப்ரகதீஷ் காலையில்தான் வந்தான். எஜமானனின் காலை விடாது சுற்றி வரும் பூனைக்குட்டியாய் மனம் அவனையே சுற்றுவதாய்! கருவுற்றிருக்கும் காலங்களில் இயல்பாக எழும் உணர்வுகளாய், அவன் அன்பையும் அரவணைப்பையும் தேடி மனம் ஏக்கமாய் தவித்தது.

இது எதையுமே அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ாருக்கோ நடக்கும் விழாவுக்கு வந்திருப்பது போல் மர்ந்திருந்தான். அழகிய அம்மன் கோவில் தேர் ஒன்று சைந்து வருவது போல் வந்து அமர்ந்த அவள் விழிகள், னிடமே இருந்தன. பார்வையை அவளிடமிருந்து விலக்கி த்திலிருந்த தன் தந்தையுடன் பேச ஆரம்பித்தான் அவன்.



வளையல்களை அடுக்கி முடித்து, நலங்கு வைத்து ஆரத்தி சுற்றி எழுந்தவுடனே சோர்வாக உணர்ந்தாள் ஸ்ருதி. குழந்தையில்லாததால் உடனே ஜனனியையும் உட்கார வைத்து நலங்கு வைத்தனர். சாப்பிட்ட பிறகு நீலா அவளை ஓய்வெடுக்கும்படி கூறிவிட்டு ப்ரகதீஷிடம் வந்தவள், ''உள்ளே போய் ஸ்ருதியோட பேசிட்டிருப்பா.. நேத்திலேருந்து உன்னையே எதிர்பாத்துட்டிருந்தா... நீ காலையில்தானே வந்தே.. போ..'' என்றார். விருந்தினர்கள் சிலர் சாப்பிடச் செல்ல, மற்றவர்கள் உறவினர்களைக் கண்ட மகிழ்ச்சியில் பழைய கதைகளை சுவாரசியத்துடன் பேச ஆரம்பித்திருந்தனர். அவள் படுத்திருந்த அறைக்குள் சென்ற ப்ரகதீஷின் பார்வை சிறிது நேரம் அவளையே ஊடுருவியது.

மகரந்தங்களை தன் மடியில் சுமக்கும் மலர்களைப் போல், தன் மழலையை அவள் சுமந்து நின்றபோது அவன் மனம் தன்னிலை இழப்பதாய்! ஒரு தனி அழகுடன் கண் மூடி அவள் படுத்திருந்த கோலம் அவனை மிகவும் சலனப்படுத்துவதாய்!

அவன் வந்த சுவடு தெரியாமல் திரும்ப நினைத்தபோது அவளுடைய இமைகள் பிரிந்தன. எதிரே அவனைக் கண்டதும் முகம் பிரகாசமாக எழுந்து அமர்ந்தாள். ''வாங்க.. உக்காருங்க!'' அவள் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று இதயத்தைப் புரட்டிப் போட... ''இல்லை.. அம்மா சொன்னாங்களேன்னுதான் வந்தேன்'' அவன் குரலில் வீம்பும் பிடிவாதமும்!

''ஓ..!'' என்றவளின் புலன்கள் உடனே ஓய்ந்தன. வெளியில் செல்லத் திரும்பியவளை ''நீங்க உடனே திரும்பிப் போனாக் கூட அத்தை ரொம்ப வருத்தப்படுவாங்க'' என்று நிறுத்தியது அவன் குரல்!

ஒரு பெருமூச்சுடன் 'ப்ச்..!' என்றபடி தலையை குலுக்கிக் கொண்டு திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்தான் ப்ரகதீஷ்.

''என்னைப் பத்தி விசாரிக்க வேணாம்... நம்ம குழந்தை எப்படி இருக்குன்னு கூட கேக்க மாட்டீங்களா?'' ஏக்கமாய் வந்தது அவள் குரல். மெல்ல நிமிர்ந்த அவன் பார்வை சீற்றத்தை சுமந்திருந்தது. ''எதையுமே மறக்க முடியலை அப்படின்னே? இப்ப என்ன திடீர்ப் பாசம்..? குழந்தையை வச்சு என்னை வளைச்சிடலாம்னு பாக்கறியா...? யாராலயும் என்னை மாத்த முடியாது'' ஏளனமாய் ஒலித்த அவன் குரலில் மனதில் மூண்ட கோபத்துடன் ''எனக்கும் தெரியும், என்னா.. அந்த அளவுக்கு அந்த மாயா உங்களை மயக்கி இருக்கா... பரவாயில்லை! எனக்கு என் குழந்தை போதும்... உங்களோட அன்பு தேவை இல்லை'' என்றாள் வீம்பாக.

''எனக்குந்தான்!'' என்றவன் வேகமாக வெளியே சென்று விட்டான். அவன் வருமுன் அவனிடம் பேச வேண்டும் என்று யோசித்து வைத்திருந்த வார்த்தைகள் உள்ளுக்குள்ளேயே புதைந்தன.

அவனும் தானும் இனி நேசத்தின் நேர்க்கோட்டில் என்றாவது சந்திப்போமா என்ற பயம் அவளுக்குள் படர்ந்தது. கல் விழுந்த கண்ணாடியாய் மனம் சிதறிப் போய்!

அப்போது உள்ளே வந்த நீலா, ''என்னம்மா.. ரொம்ப டயர்டா இருக்கா? ப்ரகதீஷ் கிட்ட கேட்டா அவ ஓய்வெடுக்கட்டும்மா அப்படிங்கறான்...'' கேட்டவரின் குரலில் பரிவு நிறைந்திருந்தது.

''ஆமாத்தை... நீங்க போய் சாப்பிடுங்க, ராத்திரி சரியாவே தூங்கலையா... அதான்!''



''சரிம்மா... நீ படுத்துக்க. நல்லா சாப்பிடணும். இரண்டு பேருக்கு சாப்பிடணும்கறதை மறந்துடாதே. எந்தக் கவலையும் மனசுல இருக்கக் கூடாது. ப்ரகதீஷை பாக்கணும்னு தோணிச்சுன்னா ஒரு ஃபோன் போட்டா ஃப்ளைட்டில கிளம்பி வந்து பாத்துட்டுப் போறான். எதுக்கும் மனசு கலங்கக் கூடாது. புரியுதா...?'' என்று பாசமாக கூறிவிட்டு கதவை மூடிவிட்டுச் சென்றார்.

உறவினர்கள் சென்றுவிட, பாட்டி மட்டும் அவளுடன் இருந்தார். அவர் மடியில் ஆசையுடன் படுத்திருந்தபோது சிறு வயதில் மொட்டை மாடியில் பாட்டியிடம் கதை கேட்ட நிலவு நாட்களை நினைத்து உள்ளம் ஏங்கியது. மனம் முழுக்க அவன் நேசத்தை சுமந்து கொண்டிருந்தது.

அவனுடைய தாய் அவனைப் பத்து மாதங்கள் தன் கருப்பையில் சுமந்திருக்கலாம். ஆனால் எங்கிருந்தோ வந்த நான், அவனை தன் இதயக் கருவறையில் வாழ்நாள் முழுக்க சுமக்கப் போவது அவனுக்குப் புரியவில்லையே என்று தவிப்பாய் படர்ந்தது மனது.

ப்ரகதீஷும் தன்னையே வெறுத்தபடி அமர்ந்திருந்தான். அவளைத் தன்னையறியாமல் காயப்படுத்தி விட்டது புரிந்தது. தன் மேலேயே கோபம் வந்தது. ஒரு சின்னக் குழந்தை கையில் ஒரு பொம்மையைக் கொடுத்து இது உனக்குத்தான் என்று கூறிவிட்டால் அந்தக் குழந்தை அதை யாருக்கும் தராது. அந்த பொம்மை தனக்கு மட்டும்தான்... யாரும் தொடக் கூடாதுங்கற ஒரு ஆளுமை வந்துடும்... அதுபோல்தான் தன் காதலோ என்றும் தோன்றியது.

தனக்கென்று சொந்தமான அவளை நினைவுகளால் கூட மற்றவரிடம் பங்கு போட்டுக் கொள்ள மனம் விரும்பாதது சிறு

பிள்ளைத்தனமாய் தோன்றினாலும் அந்த ஆளுமைதான் காதல் என்பதும் புரிந்தது.

ப்ரகதீஷ் அன்றே கிளம்பி ஊருக்குச் சென்றாலும் மிகவும் குழம்பி இருந்தான். ஸ்ருதி அவன் நினைவிலேயே காற்றின் வருகைக்காக மௌனமாகக் காத்திருக்கும் குழலைப் போல் தவமிருந்தாள். மாயாவைப் பற்றி நினைத்தாலோ உயிர் வரை வலித்தது.

## 12

*எனக்குப் பிடித்த*
*எல்லாவற்றையும் விட...*
*என்னை ஆட்படுத்தி...*
*இதயம் நுழைந்து...*
*உயிரில் கலந்த*
*இனிய கீதமாய்...!*

ரமணியின் கவனிப்பும், பிரசவம் வரை தங்கி இருக்க வந்திருந்த பாட்டியின் அரவணைப்பும் இருந்தாலும் ஸ்ருதியின் மனதில் ப்ரகதீஷுக்கான இடம் வெற்றிடமாய்! கருப்பைக்குள் மழலையின் உயிர்ப்பு இப்போதெல்லாம் அதிகமாய்! அந்த சிசுவின் கால்கள் மோதும்போதோ, வலிக்கின்ற சுகமாய் வயிற்றில் ஒரு அவஸ்தையான …டபடப்பு!

… பாட்டியிடம் பயத்துடன் கேட்டபோது அவளை மடியில் …ய்த்தபடி அவர் பொறுமையாக விளக்கினார். "எல்லாருக் …ம் இப்படித்தான்டா... உங்க அம்மாவுக்கும் அப்படித்தான் …ருந்தது. அவ கேட்டதில்லை... நீ கேக்கறே! அதான்



வித்தியாசம்! இன்னும் கொஞ்ச நாள்தான்.. அப்புறம் குழந்தையோட முகத்தைப் பாத்தா, எல்லாம் சரியாயிடும்'' என்றார்.

ஸ்ருதிக்கோ இப்போதெல்லாம் அவர் துணை மிகவும் தேவையாய்! நாட்கள் கடுகிக் கடந்தன. சூல் சுமக்கும் மலராய் ஸ்ருதி வெகு அழகாய், பூசிய உடலுடன் தனிப் பொலிவோடு இருந்தாள்.

அன்று அமெரிக்காவிலிருந்து ஃபோன் வந்தது. அடுத்த வாரம் விமலாவும் அவள் கணவர் மோகனும் இந்தியா வருவதாகக் கூறினார்கள். டாக்டரும் அவளுக்கு பத்து நாட்களில் பிரசவம் நடந்து விடும் என்று கூறி இருந்ததால் புது வரவை எதிர்நோக்கி அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர்.

மனம் பாரத்தை சுமக்க, வயிற்றில் சுகமான சுமையாய் தன் குழந்தையைச் சுமந்து கோடி எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள் ஸ்ருதி. ஆனால் ப்ரகதீஷ் வரவே இல்லை. விமலா சென்னைக்கு வந்துவிட்டு பிறகு இங்கு வருவதாகக் கூறி இருந்ததால் அன்று அவனிடம் பேசினாள்.

''ஹலோ...'' என்ற அவன் குரல் தேவராகமாய் உள்ளிறங்கி உயிர் வரை தீண்டுவதாய்! ''நான் ஸ்ருதி பேசறேன்... எப்படி இருக்கீங்க?'' என்றாள் மெல்லிய குரலில்.

''ம்... என்ன விஷயம் சொல்லு!'' யாரிடமோ பேசுவது போன்ற குரல்!

''நாளைக்கு சித்தியும், சித்தப்பாவும் ஸ்டேட்சிலேருந்… வராங்க.. அங்க நம்ம வீட்டுக்குத்தான் வருவாங்க..''

''என்ன சொன்னே?'' அவன் வேகமாக வெளியிட… மூச்சுடன் கேட்டபோது, ''ம்... அங்க நம்ம வீட்டுக்குத்தா…

வராங்கன்னு..! அங்க ஒரு நாள் தங்கிட்டு இங்க வராதா சொன்னாங்க... கொஞ்சம் கவனிச்சுக்கங்க!" தயக்கத்துடன் கூறினாள்.

"எனக்கும் உனக்கும்தான் பிரச்சனை! அத வரவங்க கிட்டே காட்டறதுக்கு நான் ஒன்னும் முட்டாள் இல்லை" என்று உடனே இணைப்பைத் துண்டித்தான். வாடிய பிறகும் உதிராத மலர்களைப் போல், அவள் மனமும் வாடிப் போய்க் காத்திருந்தது.

மறுநாள் விமலாவையும், மோகனையும் ஏர்போர்ட்டிற்குச் சென்று அழைத்து வந்தான் ப்ரகதீஷ். அவனிடம் கல்யாணத் திற்கு தங்களால் வர முடியாமல் போனதற்கு வருத்தம் தெரிவித்தார் மோகன்.

விமலா உடனே, "அதனால என்னங்க? இப்ப குழந்தை யையும் சேர்த்து பாத்துட்டுப் போயிடலாமே!" மகிழ்ச்சியுடன் கூறியவர் ப்ரகதீஷிடம் திரும்பினார். "எனக்கு ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை... முதல்லே இந்த கல்யாணத்துக்கு ஸ்ருதி முடியாதுன்னதும், ஆனா அத்தான் பிடிவாதமா ற்பாடு செஞ்சதும் நான் ரொம்ப பயந்து போயிட்டேன். அவ வேற ஒருத்தரை விரும்பறாளே... அவளோட வாழ்க்கை ன்னாகுமோன்னு ரொம்ப கவலையோடதான் ஊருக்குப் பானேன்" என்றபோது ப்ரகதீஷின் விழிகளில் கூர்மை ந்தது.

அவள், "மறுநாளே ஃபோன் பண்ணினப்ப தான் ஸ்ருதி ன்னா... 'நான் விரும்பினவரும் என்னைப் பெண் பார்க்க வரும் ஒருத்தரேதான் சித்தி. அவரை மனசுல க்கிட்டுதான் வந்த மாப்பிள்ளையைப் பிடிவாதமா நான் ர்த்து கூடப் பாக்கலை! அப்புறமா நேத்து விஜய்



சொன்னப்புறம்தான் தெரிஞ்சது... அவன் கல்யாணத்தப்ப பாத்து நான் உயிரா நேசிக்க ஆரம்பிச்ச ப்ரகதீஷ்தான் இந்த மாப்பிள்ளைன்னு' அப்படின்னு துள்ளிக் குதிச்சா... 'எல்லாம் நல்லபடியா முடிஞ்சிட்டதாலே இது யாருக்கும் தெரிய வேண்டாம்' அப்படின்னா! அத்தான் ரொம்ப கோபக்காரர்... நானும் சரின்னேன். ஆனா எப்படியோ மாப்பிள்ளை! எல்லாம் நல்லபடியா முடிஞ்சு நீங்க ரெண்டு பேரும் அன்பான தம்பதிகளா இணைஞ்சு இப்ப ஒரு குழந்தையும் பிறக்கப் போகுது. இப்பதான் எனக்கு ரொம்ப நிறைவா இருக்கு. எனக்கு அவளும் ஒரு பொண்ணுதான்!" என்று முடித்தார்.

பேரதிர்ச்சியுடன் நிமிர்ந்தவனின் முகமாற்றத்தை கவனிக்காமலே இருவரும் லக்கேஜை தங்கள் அறைக்குள் எடுத்துச் சென்றனர். உடனே ஸ்ருதியின் முகமும், பேசும் விழிகளும், எதையோ சொல்லத் துடிக்கின்ற முகபாவமும், அவளின் வருகைக்கு கட்டியம் கூறிவரும் கொலுசுகளின் அழகு மொழியும் ஒவ்வொன்றாக அவன் நினைவில் இழை கோர்த்தன.

உடலிலிருந்த சக்தியெல்லாம் வடிந்தது போல், அப்படியே சரிந்து அமர்ந்தான் ப்ரகதீஷ். அவளால் மட்டுமே தட்டி எழுப்ப முடிந்த உணர்வுகள், அவன் மனதில் சூறாவளியாய்ச் சுழன்றன. காதலின் பாலம்தான் கண்களோ என்றும் தோன்றியது. அவள் விழிகள் பரிகசிக்கும் போதெல்லாம் அன்று தன் உலகம் அழகானது, இன்று புரிவதாய்! உள்ளூரத் தேன் பாய்ந்து உயிரும் தேய்ந்தது.

அதுவரை உறங்கி இருந்த காதல் மனம் விழிக்க ஆரம்பித்தது. மழைச் சாரலில் வந்த வானவில் ஒன்று கீழிறங்கி வந்து மனதை தொட்டுச் சென்றது போல் ஒரு உணர்வு!

நினைவுகளில் அவளைப் பற்றி ஏக்கமான அணிவகுப்பு! அவள் கொலுசு சத்தங்களை கவடாய் பதித்த இதயத்தின் தடதடப்பு! உடனே சிறகுகள் முளைத்து பறந்து சென்று அவளைப் பார்க்க வேண்டும்... அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற ஆவல் பெரிதாய்!

அப்போது டெலிஃபோன் மணி ஒலிக்க எடுத்தபோது ஸ்ருதியின் அப்பாதான் பேசினார். ஸ்ருதிக்கு பிரசவ வலி எடுத்து ஹாஸ்பிடலில் சேர்த்திருப்பதாக கூறியவரிடம், உடனே கிளம்பி வருவதாகக் கூறிவிட்டு வைத்தவன் வேகமாகச் சென்று விமலாவிடம் விஷயத்தைக் கூறினான்.

ஊருக்கு அவர்களும் வருவதாகக் கூற, உடனே டிரைவரை காரைத் தயார் செய்யச் சொல்லி கிளம்பினான். கண்கள் சிவந்து தன் மேலேயே மனம் வெறுப்பை உமிழ, சாப்பிட்டு விட்டு கிளம்பிச் சென்றபோது உள்ளம் காரை விட வேகமாய் தன்னுள் சுருதிலயமாய் கலந்த தேவதையை நாடிப் பறந்தது.

அங்கு ஸ்ருதிக்கு பிரசவ வலி விட்டு விட்டு வந்து கொண்டிருந்தது. நேரமாக ஆக வலிகளுக்கு இடையே உள்ள இடைவெளி குறைந்து, வலியின் தீவிரம் அதிகமாகி, உச்சகட்டமான வலி ஒன்று உடல் முழுவதும் பரவி உயிர் வரை பாய தன் சிசுவுக்கு புது ஜனனம் கொடுத்து பூமிப் பந்திற்கு அறிமுகப்படுத்தினாள்.

அந்த மழலையின் அழுகை சப்தம் இனிய நாதமாய் செவிகளைத் தீண்டி, மனதை சிலிர்க்கச் செய்ய, நினைவுகள் அப்படியே மங்கின. வெகு நேரம் கழித்து யாரோ மயிலிறகால் இதயத்தை வருடுவது போன்ற உணர்வு அவளுக்குள் எழ, இமைகள் பிரிய மனமின்றி சோம்பலாய்ப் பிரிந்தன.



குழந்தையின் ஒலியில் விதிர்த்துப் போய் விழித்தபோது இருளுக்குப் பின்வரும் ஒளியாய், எதிரே ப்ரகதீஷ் நின்றிருந்தான். அவன் பார்வை முதன் முதலாகக் காதலுடன் அவளை வருடி, மென்மையாய் கோதியது.

இது கனவோ என்று அவள் நினைவுகளையே தலையணை யாக்கி மென்மையாய் தலைசாய்த்து கண் மூடியபோது அவள் விழிகள் வார்த்தைகளில் வெளியிட முடியாத பரிதவிப்புடன் அலைபாய்ந்தன.

''ஸ்ருதிம்மா..!'' அவன் குரல் தாபத்துடன் ஒலித்து, பூஞ்சாரலாய் வருடி அவள் மனதில் உட்புகுந்தது. மின்னலெனத் திறந்த அவள் விழிகளில் தான் காண்பது கனவா... இல்லை நிஜம்தானா... என்ற பதட்டம் தொற்றிக் கொள்ள விழிகள் கூர்மையாகின.

மெதுவாக அவளருகில் வந்தவன் கண்களில் நேசப் பளபளப்புடன் அவள் நெற்றியை வருடி, முன்னுச்சியில் தன் இதழ் பதித்தபோது அவள் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் அரும்புவதாய்!

கண்ணீர்.. அது இதயத்தின் ஓசை என்றாலும், நயனத்தின் பாஷையாய் வழிய, அந்த ஒற்றைத் துளியை விரல்களால் சுண்டியவன், ''ஸ்ருதி, மை லவ்.. அழக் கூடாது! நாம சந்தோஷமாக இருக்க வேண்டிய நேரம் இது..!'' என்றபோது அவன் குரலில் உணர்ச்சிக் குவியல் அதிகமாய்!

ஒரு மலர்க் குவியலைப் போல் ரோஜா நிறத்தில் அவனையே சிறிதாக்கியது போல் இருந்த குழந்தை எடுத்து அவளிடம் காட்டியபோது, 'என்ன தவம் செய்தோ என்று ஸ்ருதியின் மனம் விம்மியது. மென்மையா

வருடியபோது அது அவளின் தொடுகை புரிந்து 'ங்கா' என்றவுடன் இதைவிடப் பெரிய வரம் ஏதுமில்லை என்று மனம் பூரித்துப் போனது!

அப்போது ப்ரகதீஷை நிமிர்ந்து பார்த்தபோது அவனும் ஒரு வளர்ந்த குழந்தையைப் போல், அவளிடம் அன்பை யாசகம் செய்தபடி! கண்களில் கேள்வியுடன் ''மாயா?'' என்றபோது ஒரு நெடிய பெருமூச்சு எழுந்தது அவளிடம்! அவனுடைய கைகளை இறுகப் பிடித்தபடி அவளருகில் அமர்ந்தான்.

''மாயாங்கறதே நான் உனக்கு வச்ச கற்பனைப் பேருதான் ஸ்ருதிம்மா... அன்னிக்கு என் மனசைப் பறிச்சிட்ட நீயே என்னை விரும்பலைன்னு உன் சித்தி கிட்ட சொன்னப்ப, என் மனசுல ஒரு வன்மம் வந்தது. நீ வேற யாரையோ விரும்பறேன்ன உடனே நானும் அப்படி ஒரு பொய் சொன்னேன்'' என்று ஒரு பெருமூச்சுடன் நிறுத்தியவன் தொடர்ந்தான்.

'இப்பவும்... உன் சித்தி சொன்ன பிறகுதான் நீயும் என்னை விரும்புறது தெரிஞ்சது. அன்னிக்கு.. நான் ஒரு மிருகம் மாதிரி நடந்துக்கிட்டதுக்கு காரணம்... நினைவுகளாலே கூட உன்னை யாரோடவும் பங்கு போட்டுக்க என்னால முடியலை.. அதான்! ஆனாலும் தப்புதான். ஸாரிடா... என்னை மன்னிப்பியா?''

ஆழ்கடலளவு நேசத்தைச் சுமந்திருந்த அவன் மனதின் திர்பார்ப்பு, ஏக்கம் தீறலாய்!

அவனுடைய கைவிரல்களை மென்மையாக முத்த டவன், ''நான் அதை எப்பவோ மறந்துட்டேன். அதுக்குப் தான் இந்தக் குட்டி ரோஜாப்பூ நமக்கு கிடைச்சிருக்



காளே..!'' என்றபோதும் அவன் மனம் சமாதான மடையவில்லை. ஒரு தவிப்புடன், ''உனக்கு என் மேல வெறுப்பு எதுவும் வந்திடலையே..?'' என்று உருகிப் போய் கேட்டபோது அவன் உயிர் உருகும் ஓசை அவள் இதயம் வரை கேட்பது போல்!

ஸ்ருதி குறும்பாய் கண் சிமிட்டியபடி, ''நிச்சயமா இல்லை. ஆனா ஒரே ஒரு கேள்வி மட்டும் இருக்கு. அன்னிக்கு நான் ஊருக்கு வரதுக்கு முதல்நாள், மிஸஸ் மாயான்னு பேசினது யாரு?'' என்றவுடன் ப்ரகதீஷ் சிரிக்க ஆரம்பித்தான்.

''போச்சுடா... அவங்களைத் தப்பா நினைச்சிட்டியா? மிஸஸ் மாயா நம்ம கன்சர்ன்லே வேலை பாக்கறவங்க... அவங்க ஹஸ்பெண்ட் என்னோட ஃப்ரெண்ட். பேர் மாயாண்டி! அதை சுருக்கமா அப்படிச் சொல்வாங்க. என்னை விட ஒரு பதினைஞ்சு வயசுதான் அதிகம் இருக்கும்.. பேரிளம்பெண்! போதுமா...!'' குரலில் குறும்பு கசிந்து வழிந்தது.

''ம்... அப்புறம் ஏன் அன்னிக்கு நைட் சாப்பிட வரலை..? ரொம்பக் கோபமா இருந்தீங்க?'' சிணுங்கலாகக் கேட்டாள்.

''இனிமே தினம் ஆபீஸில நடக்கிற விஷயத்தை எல்லாம் ஒய்ஃப் கிட்டே ஒப்பிச்சிடணும் போலருக்கு... அன்னிக்கு நம்ம கன்சர்ன்ல கம்ப்யூட்டர் வைரஸ் வந்து ரொம்ப ப்ராப்ளமாகி, அத சால்வ் பண்ணிட்டு வர லேட்டாயிடுச்சிடா... அவ்வளவு தான். வேற ஏதாவது கேள்வி இருக்கா... ஸ்ருதிம்மா..?'' வார்த்தைகள் வாஞ்சையுடன் வருடின.

ஸ்ருதி 'இல்லை' என்ற தலையசைப்புடன் ஒரு கணம் இமைச் சிப்பிகள் இறுக மூடித் திறந்து கூச்சத்துடன் ''ஸாரி..!'' என்றாள். வேறு வார்த்தைகளே தேவையின்றி, அவன்

விழிகளில் ஆயிரம் வெட்கக் கவிதைகளை வாசித்து அறிந்தான் ப்ரகதீஷ். இனி ஒரு பிரிவில்லை என்ற நிம்மதி, இருவர் மனதிலும்!

அவளுடைய பாதக் கொலுசொலி... இன்று மழலையின் சங்கீத மொழியாய்! இந்த தேவதையின் அன்பு மழையில் நனைந்து நேசமாய் மடியில் சாய்ந்து சிறு குழந்தையாய் மகிழ வேண்டும் என்ற ஏக்கம் அவனுக்குள்!

"இனிமே என்னையும் அப்பப்ப கவனிச்சுப்பே இல்லை..? இல்லை, இவளுக்கு மட்டும்தான் உன் மடியில் இடமா?" அவன் விழிகள் ரகசியச் சிரிப்புடன் கூடிய எதிர்பார்ப்பில் மலர்ந்தன.

குறுகுறுத்த விழிகளுடன், "ரெண்டாவது குழந்தை வந்துட்டா, தன்னோட முதல் குழந்தையை மறந்துடுவாங்களா என்ன?" என்றபடி அவன் தலையை ஸ்ருதி செல்லமாய் கலைத்து விட்டபோது, கண்கள் கசிய அவள் கன்னத்தில் மென்மையாய் தன் இதழ் பதித்தான் ப்ரகதீஷ்.

குழந்தை அழ ஆரம்பிக்க, மெதுவாக கதவைத் தட்டி விட்டு ரமணியும், விமலாவும் உள்ளே வந்தனர். அன்று ஸ்ருதியமாய் அவனுள் நுழைந்தவள், இன்று இனிய கீதமாய் அவன் உயிரில் கலந்தாள்.

வெளியே வானம் மழைத் துளிகளின் வாயிலாக பூமியை முத்தமிட ஆரம்பித்தது. மின்னல் கீற்றுகள் ஒளியைப் பரிசளித்துக் கொண்டிருந்தன. மழைச் சாரலை நமக்குள் ஏந்திய புத்கள், மௌனமாய் சயனித்திருந்தன. அவர்களுடைய வானம் அழகாக விடிந்தது.

* * *